ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அம்பகலியாண நாடகம்.

இஃது

கூடலூர் தாலூக்கா சேடப்பாளையம் மதுரா சங்கிலி

குப்பத்திலிருக்கும்,

ம-௱-௱-ஸ்ரீ, K. சுப்பராய நாட்டார் குமாரர்

கூடலூர் - முனிசிபல்ஸ்கூல் உபாத்தியாயர்

S. முருகேச நாட்டாரவர்களால்

ஏட்டுபிரதியைக்கொண்டு

எழுதப்பட்டு.

கூடலூர் புஸ்தகவியாப

க மு. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்

வேண்டுகோளின்படி

தக்கோலம்.

இராமசாமி நாயுடு அண்ட் சன்ஸ்

அவர்களாற் றமது

சென்னை, சூளை.

ஸ்ரீ லட்சுமி நாராயண விலாசம் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

ரிஜிஸ்டர்செ

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
24 JUL 1911
MADRAS

அம்பகலியாண நாடகம்.

விநாயகர்காப்பு-கவி.

சீரானயிப்புவியோர் புகழும்காசி
திகழ்மகுடமன்னவனு மகிழ்ந்தளித்த
பேரானயம்மையம்பாலிகை பேதையர்கள்
கலியாண கதையைப்பாட
நேரானதிருக்கைலைவாசருன நிமலி
பாடபாகருமே தந்தபாலன்
காரணமெய்வண்ணன் மருகனுன
கணபதியின் இருபாதம் காப்பதாமே.

சுப்ரமணியர்பேரில்-விருத்தம்.

ஆறுமுகனேபோற்றி அம்பையம்பிகையுந்திவ்ய
தேன்மொழியம்பாலிகை திருமணச்சரிதைதன்னை
ஊனமொன்றில்லாயிந்த உண்மைநாடகத்தைப்பாட
கானகமயில்மீதேறும் கந்தனர்ப்பாதம்காப்பாமே.

விருத்தம்.

...கரும்தந்திடும் செல்விக்கதைதனைநாடகமாக
...தனிலன்பாய்பாடுதற் கருளும்காலகாலந்தனேபோற்றி
...சவன்மாலுமயனடிபோற்றி வாணியினிருபதம்போற்றி
வையகம்துதிக்கும்மரிபுரமாரி மங்களபதமலர்போற்றி
தேசமும்திகழும்திருநகர்சாலை சீனுவாசையனேபோற்றி
...சைபுகழ்பாணும்பட்டினிலோங்கும் செய்யராகவையனேபோற்றி
... சர்வதேவர்கள்பாதம் அடியவன்அன்புடனேபோற்றி
...வாணர்மலரடிபோற்றி அய்யனேமெய்யனேபோற்றி.

கலித்துறை.

...கரிமுகனே பத்ததென்புகொண்டு
... கையொன் றறியாமெய்யடியேன்
...ணம் பாடுதற்கு
... தடைக்கலமே.

புரியதபம்யென்மனது அன்புகொண்டென்
வையகம்புகழ்ந்தேற்றும் சூலபாணி
வந்துகுறைதீர்த்தருளும் தாயேபோற்றி

அம்மை-தரு

ஆதிவேதாந்தகி சோதிசுடரொளியே
யிந்தஅடியர்மீதன்புவைத்து வரந்தருவாயே
நாதனென்றிராடும் பாதமதையென்றுகான்பேனோ
எதிர்நாடியேவரமனம் வந்துவரந்தருவாயே
நீலிசடாதாரிநிமலி பஞ்சாக்ஷரியேயம்பா
நித்தியகல்யாணியே சத்திகிருபாகரியே
சூலிகபாலி சுடர்மழுதாரிரிநீயேயம்பா
சுந்தரியேஎன்முன்வந்து சிந்தைபுரிவாயென்
மகிடசங்காரி மனபூர்த்தியாக
என்முன்வாரும் யானேந்தியவரந்தாரும்
அகிலகாரணியாளே ஆதிபராபரியேவாரும்
அன்பாகஅடியவள் வேண்டியவரந்தாரும்
சிம்பவாகணியேஎழிற் சங்கீர்தஅலங்கரியாளேஎந்தன்
சிந்தையில்வந்தெந்தன் துயரதைபோக்கிட
யுன்சித்தமெனோகார்க்க மெய்யாணையுன்றிருபாதமாணை
நம்பினேன்னுன்பாதம் உண்பர்கள்புகழ்ந்திடுமாதா
அம்பா உண்மையி துருதியாய்வருவாயிப்போ(ஆ)

பொது-கவி

அடியாளைநோக்கியம்மை அருந்தவம்புரியும்போது
நெடிமுடிபளபளென்ன நிகரில்லாகணங்கள்சூழ
வடிவாளைஅழிசங்கம் வரிசிலேசூலமேந்தி
கடிகியேசிம்பமேறி காளிகைவருகின்றாளே

காளிகாதேவி-தரு

மாதுபத்திரகாளிவந்தனளே அகோரவீர (மா)
மாதுபத்திரகாளிவந்தாள் மண்டலசங்கரிஅகிலகாரணி
சோதிபொற்புள மாலையாடிடவே
தாவியேமலர் தேவர்வாழ்ந்திடவே (மா)
சூலமும்பரிவேலுமிலங்கிட சங்காழியீட்டியும்
கோலமாமணி மாலேதுலங்கிட
மூலமந்திர சூலசூக்ஷரி
முடிவிலாசதுர்வேதவித்தகி கோலகாலகிமாலசகோதரி
கோரமாகிய வீரபத்தரி (மா)
...ந்திரப்பிறைதந்தம்வீசிடவே வெகுவினோத
...வதவர்அதிகள்பேசவே கந்தாமலர்விந்தைபூஷணி
...ன்றுமேவளையல்கொஞ்சிட சுந்திரத்தொணி
...கசோதிப்பெருகிடவே வேதநாயகி (மா)

டமரங்கிண்ணரிபாடவே பூதகணங்களும்
திமிதிமிதிமியென நாட்டியமாடவே
நமனுமஞ்சிட கமலத்திருவிழி
நங்கையாளுமே மங்களத்துடன்
அமலரூடெதிர்த்திடும் பாதமும்
அம்பைகாணவே சம்பரமாகவே (மா)

அம்பை-தேவாரம்

மங்கையவதனிமகிடசங்காரியார்பரிநித்திபகல்யாணி
சங்குசக்கரம்சூல்ம்வேலும்தரித்திடும்நடினசிங்காரி
திங்கள்சேகரனோடாடியேபாதம்தேவியே அடியவன்பொற்றி
என்குறைதீரயெதங்கிமுன்வந்தயேழைபங்காளியேபோற்றி

அம்பை-கவி.

அம்மணிசுரக்கெட்டாத அரிதானபாதம்காண
செம்மையாய்அடியாள்முன்பு செய்தநற்தவமோயல்லால்
எம்மைதந்திடும்தாய்தந்தை எவர்செய்ததவமோதாயே
உம்மிடபதத்துக்கண்பர் ஒருகோடிசரணம்போற்றி.

காளிகாதேவி கவி.

அரிதானதவம்புரிந்த அம்பையேசுகித்துவாழி
நெரியானதபத்துக்கன்பாய் நேசமாய்காட்சிதந்தேன்
விரிவான்உலகோர்மெச்ச வேண்டினவரத்தைக்கேளும்
தருகிறேன்தடையொன்றில்லை தையலேயுரைசெய்வாயே.

வசனம்.

வாரும் அம்பையே நீர்செய்ததபத்துக்கிதங்கி காட்சிதந்தேன் சந்தோஷமாய் உனக்கென்னவரவேண்டும் கேளும் தருகிறேன்.

அம்பை கவி.

அண்டரெண்டம் துதிபெறவும்தாயேபோற்றி
அடியாளுக்கென்னவரம் வேண்டுமென்றால்
நன்மையுடன்யென்தங்கை மூவரையும்ரதத்திலேற்றி
கொண்டுவந்து யென்னைமணம்புரியேனென்று
கூரிவிட்டவீஷ்மா சாரியாரைக்கொல்ல
தொண்டர்பணிதாயே யிவ்வரம்பாலித்து
துணையிருந்து அடியளைரட்சிப்பாயே.

வசனம்.

சரணம் சரணமம்மா தாயே அடியாளுக்கு வேண்டியவரமாவது யென்னவென்றால் காசிபூபதி எனக்கும் என்தங்கை யிருவருக்கும் சுயவரஞ்சாட்டவந்த ரர்ஜாதிபதிகளைசமர்புரிந்து எங்கள்மூவ

ரையும் ரதத்லேற்றிவந்து தம்பிக்குளன் தங்கையிருவரையும் மணம் புரிந்து தானென்னை மணம்புரியாமல் அலையவிட்ட மகாபாவியான வீஷ்மாசாரியை நானேகொல்லும்படி வரந்தருளுமம்மா தாயே.

காளி கவி

அம்பையேகேளாய்முன்பு அஷ்டவசுக்களிலொருவனாயிருக்க
அருமறையுணர்ந்தவதிஷ்டர்சாபத்தால் அரசனாய்வந்ததறிந்து
இன்பமும்வெருத்துபாவபுண்ணியத்தை யின்னதென்றறிந்திடவே
இருக்கிறவீஷ்மாசாரியைநீயுமிப்போது கொல்லவொண்ணாது
தம்பிதன்மனைவிமைந்தர்கள் மைந்தன்தரணியிலரசன்விளங்கி
சத்துருவாகதுரியனைச்சேர வரந்தரும்பஞ்சவரிடத்தேவி
நம்பியேதுருபன்வேள்வியிலுதிக்கும் நாயகியுடப்பிறப்பாகி
நல்லவீஸ்மரைக்கொல்லவேவரமும் ஈவின்றனன்கைக்கொள்வாயே.

வசனம்

கேளும் அம்பையே அந்தவீஷ்மாசாரியோ முன்னாலே அஷ்டவசுக்களில் ஒருவனாயிருக்க வதிஷ்டர் காமதேனுவை கன்னமிட அதையரிந்து அந்த எழுவரும்பிரந்து வரவும் மற்றொருவனும் இவ்விடத்தில் அருமையானபாவங்களைகண்டுவரும்படி வதிஷ்டர்சாபத்தினால்வந்து பிரந்திருப்பவனை இந்தஜென்மத்தில் கொல்லமுடியாது உன்தங்கையாகிய அம்பிகையிடமாய் திருதராஷ்டிரனும் அம்பாலிகை வயற்றில்பாண்டுராஜாவும் பிரக்கப்போகிறார்கள் திருதராஷ்டிரன்வயற்றில் துரியனுடன் நூற்றுவரும் பிறப்பார் பாண்டுராஜன் வயற்றில் அய்வர்களும் பிறப்பார்கள் அப்பொழுது பஞ்சவர்தேவியான பாஞ்சாலன்யாகத்தில்றதுபதாதேவி பிறந்து அய்வராஜாக்களையும்மணம்புரியப்போகிறாள் அப்பொழுது நீயாகசேனியிடமாக ஆணுமில்லாத பெண்ணுமில்லாத சேகண்டியாகப்பிரந்து வளரும்காலத்தில் பாண்டவருக்கும் துரியோதனனுக்கும் யுத்தம்நேரிடும் அக்காலத்தில் பாண்டவருக்கு சகாயமாய்யிருந்து எதிரிசகாயமாய் யிராநின்ற வீஷ்மாசாரியை நீகொல்லக்கடவாய் இந்தப்படிவரந்தந்தேன் கைக்கொள்ளும் அம்பையே.

வேலுமயிலந் துணை.
குருபாதம் துணை.
சாரதாம்பாள் துணை.

அம்பைகலியாணம் முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆதிபருவத்திற் குறிய காசிமகாராசன் குமாரத்திகளாகிய அம்பையம்பிகை அம்பாலிகைஎன்னும் ஸ்திரீகளுக்கு விவாகம் நடத்திய சரித்திரத்தை நாடகமாக பாடுதற்கு இக்கதைக்கு முன்னிலையில் பிரகாசித்து நடத்துவதற்கு அன்புடைய செங்கழனியையங்கார் பாதத்தை வணங்கி சரித்திர வரலாறு கூறுகின்றனன்.

அகவல்,

சீர்பெரும்உலகில் தேசமன்னவற்கு
பேர்பெருங்காசி பிரபலமன்னன்
நன்னெறியுடனே இராஜ்யமாள
வரணமாம்மூன்று மாதரைப்பயன்று
செல்வமாய்வளர்த்து திரனும்மகிழ்ந்து
கல்விகளுணர கற்றிடசெய்து
அருவைக்குசுயம்வரம் அடவுடன்சாட்டி
வருவிக்கமன்னரை வந்தவர்சூழ
அப்போதுகாசி அரசனுமகிழ்ந்து
தப்பிதமில்லா தன்மகளான
அம்பையம்பிகை யம்பாலிகைதன்னை
இன்பமாயழைத்து இத்மன்னவரில்
மனதுக்கிசைந்த மகிழ்பதியவற்கு
கணம்பிரமாலை கடிகியேசூட்ட
விடைதரப்பெண்கள் வேந்தரைப்பார்க்க
திடமுடன்வீஷ்மற் சித்திரவீரியரை
இச்சிக்கும்போது யெழில்மன்னர்கண்டு
உச்சிதகுலத்து உயர்முடிவேந்தர்
வந்துநாமிருக்க வலைச்சியின்றெடுத்த
மைந்தரைப்புணர மாதர்கள்விதியோ,
என்றுமே அரசர் இகழ்ச்சிகள்கூற
நன்றல்லவென்று நங்கையர்போக
சேதிகளெல்லாம் சேவலர்கூற
போதவேவீஷ்மர் பெங்கியேமீரி
தம்பியும்தானுமாய் சமருக்குகந்து
அம்புவிமன்னரை யதோகெதியாக்கி

வெத்திகள்செய்ய வீரியகாசி
உத்தமமன்னன் உள்ளமுங்களித்து
பிரியமாமூன்று பெண்ணையுமளிக்க
சரியானவீஷ்மர் தம்பியும்மகிழ்ந்து
பெண்களைக்கூறி பிறியமாய்வருக
தண்மையில்மிகுந்த தையலாளம்பை
பாசமாகாங்கையர் பாதமேவணங்கி
மாசிலாசாளுவ மன்னரும்யானும்
காலையில்விற்றைக் சற்றிடும்போது
பாகரறரியப பாறிஞனென்றும்
சத்தியும்செய்தேன் தயவதுபுரிந்து
உத்தமாமனது உகந்தனுப்பென்ன
அன்பாகவீஷ்மர் அம்பையையனுப்பி
தென்பாகசென்று சித்திரவீரனுக்கு
கன்னியரிருவரைக் கலியாணம்செய்து
உன்னிதமாக உயர்முடிசூட்டி
இருக்கவே அம்பை ஏகியேசாளுவ
பெருக்கமாமன்னனை பேதையுங்கண்டு
நற்பெயவீரனுன் முன்னதாய்ச்சொன்ன
சொற்படிவந்தேன் துணைவாநீரென்னை
சாளுவபூபன் தையலைநோக்கி
கேளடிபெண்ணே கீர்த்திகளாக
உன்னிடதந்தை ஒருவருக்கீந்து
கன்னியேஉன்னை கலியாணம்செய்ய
வையகமிகழ வந்திடுமென்று
தையலையகத்த தந்தைமுன்வந்து
நங்கையும்புலம்பி நடந்ததைக்கூற
சங்கையாவரசன் தன்மனம்நொந்து
வேதினையாகி வீஷ்மர்தன்பக்கல்
தூதுவருடனே தோகையையனுப்ப
அணிமலர்குழலி அம்பையைநோக்கி
மணமதுவேண்டா மன்னனென்று
அகத்தவும்வீஷ்மர் அம்பையும்வாடி
செகத்துள்ளோர்புகழும் தந்தையற்குறைக்க
காசிபூபதியும் கணம்பெரவாடி

யோசனைசெய்து உன்னிதவிஷ்மர்
குருமொழிதவரா கொத்தவனென்று
அரிவையைக்கூட்டி அன்புடனேக
பருசுராமரிடத்தில் பாங்குடனுறைக்க
பூவையைக்கண்டு புகழ்மிககொண்டு
நலம்பெரவனுப்ப பூமியோர்புகழும்
பருசுராமருமே பாவையோடேக
வரிசையாவிஷ்மரை மனஞ்செய்யுமென்ன
தடுத்திட்விஷ்மரை சமறுக்கழைக்க
தடுத்துமேவிஷ்மர் கடுஞ்சமர்புரிய
யிரந்துஓர்தினம் இருவரும்சமமாய்
பஞ்சவரைவர் படைகளுமடிய
தோத்திரகுருவுந் தோகையும்வாடி
காற்றிடுமென்று காளியைநோக்கி
தவமதுபுரிய தயவதாயம்மன்
விபரீதபூத வேடிக்கையாகவே
வந்துமுன்தோன்றி மங்கையேவரமும்
தந்திடவந்தேன் சாத்துவாயென்ன
அப்போதுஅம்பை அம்மனைப்பணிந்து
செப்பியேநடந்த சேதிகளெல்லாம்
மெல்லியையலைய விஷ்மரைக்கொல்லவே
வரமதுவும் கொடுத்துமேமரைய
மெல்லியும்மகிழ்ந்து மேவியேகதையை
நாடகமாக நற்றமிழாலேபாட
தேவர்கள்பதம் தினமுயான்வணங்கி
பாவலர்பாதம் பாலனும்போற்றி
மேவியேவாண்டு மிக்கதோரணுவால்
விருஷபமாந்திங்கள் அருந்தேதிகுருவாரம்
திருவாதிரையாக திரிபுவனத்தில்
செழிப்புள்ளவராய் சீராகபூஜிக்க
அகரம்சாலையில் அன்பதாய்வாசிக்கும்
தபநருளேசன்சீலனும் ரங்கையசேயனுங்கிருஷ்ணன்
சுவாமியுந் தனதுசக்தியுள்ளவராய்
பூமியோர்புகழும் புண்ணியசரிதை.
நாடகமாகநலின்றிடும் கதைக்கி
தேடரிதாகியே சபைக்கிமிக்கவேயன்பாய்
மேவி வந்தனரே,

விநாயகர் கவி.

அந்தணர்கோஷ்டமபாட அமரர்பூமாரிபெய்ய
சந்திரசடையிலங்க சர்வபூஷணங்கள்மின்ன
கந்தமும்பரிமளிக்க கரிமுகவதனமின்ன
விர்தைசெங்கழணி விக்கினவிநாயகர்வருகின்றாரே.

விநாயகர் தரு.

செங்கழணிஐங்கரர்வந்தார் சபைமுன்பாக (செங்)

செங்கழனிஐயங்கரரும் கிங்கணிஅரையில்கொஞ்ச
சங்சரனாறருளியே வெங்கையமுகமுடைய (செங்)

ஆருவாகனமேரி அங்குசபாசமேந்தி
பாகுமொழிமாதர்கள் பரதசங்கீதமாட (செங்)

வேதகோஷ்டங்கள் பாடவின்னோர்மலர்சொரிய
ஆதிபராபர ஆனந்தமாரியே (செங்)

அகரம்சாலையில்மேவும் அய்யன்முத்துக்குநேசன்
சகலருக்கருள்தரும் தயாபராகியே. (செங்)

கட்டியக்காரன் கவி

அத்திமாமுகனேபோற்றி அங்கியுமாலும்பூண்டு
சத்ததண்டைகள்கொஞ்ச சரிகைபாகையுமிலங்க
வெத்திசேர்காசிமன்னன் விளங்கியேசபையைக்காக்க
கத்திகேடையம்தாங்கி கட்டியன்வருகின்றானே.

கட்டியக்காரன் தரு.

காசிராசன்வாசற்காக்கும் அதிபதிகட்டியக்காரன்வந்தான்
தேசமீதிராசர்மெச்சியே தீரனாகியகட்டியனானே
சரிகைபாகைசிரசிலிலங்க சந்தோஷமாய்வந்தேன்பாரீர்
இருபுரம்மீசையீட்டிப்போ லினிமையாகதான்விளங்க
எல்லாரும்கண்டுபயந்தொடுங்கமார்பில் பூண்டஆரமாட
சல்லரிபோல்மேளம்பாடசாரிய கட்டியக்காரன்வந்தான்
பார்புகழ்ந்திடும்பூபதிகாசி கட்டியகாரனும்வந்துமேவினான்
அரையில்சொருகும்உரகத்தியும் அன்புடன்ஈட்டிவாளும்கொண்டு
மேடாமேடிகள்கண்டுநடுங்க வீரியகட்டியக்காரன்வந்தானே.

வசனம்.

வாரும் பிள்ளாய் கட்டியா நீர் எங்கிருந்து இங்கு வந்தீர் விசேஷமென்ன தெரியச்சொல்லும் பிள்ளாய் கட்டியா நானே காசி தேசாதிபதியாகிய காசிராசன் மந்திரிபிரதானிகளுடனே சபாவாகியகொலுவுக்கு வருகிறார் நான்முன்னதாக சபை விர்த்திசெய்ய வேண்டி வந்தேன் எல்லாரும்எச்சரிக்கை இராசாதிபதிகளே.

காசிராஜன் கவி.

முதுமறையுணர்ந்துதிவ்விய முனிவர்கள்வேதம்பாட
அதிர்வேமுரசுபேரி ஆலவட்டங்கள்வீச
கதிரமணிமகுடமின்ன கனகபூஷணங்களாட
மதகரிவலியகாசிமன்னனும் வருகின்றானே

காசிராசன் தரு.

தேசமன்னவர்மெச்சும்
காசிபூபதியும்வந்தார்
ராசர்க்கதிபனை
வெகுவதனகெம்பீரன் (காசி)

(சுருள்) நேசமானமந்திரி
நிகரில்லாதபல
பகைவர்மெச்சிட
இருபக்கம்நெரிங்கிட
வீரியதீரன்
சுந்திரமாரன் (தேச)

தங்கமணிமகுடம்
தரளக்குடைக்
தரித்தபுயங்கள்மின்ன
கவிக்கவே

(சுருள்) பங்கையமாதர்கள்
பந்திபந்தியாமன்னர்
விந்தையாசதுர்
சங்கீதம்பாடவே
நெரிங்கிட
வேதமுமுழங்கிட (தேச)

பம்பைமுரசுபாட
பாருகும்கிடுகிடென்னவே
பாவலர்துதிக்காட
தம்புருவீணையும்
பாடவே

(சுருள்) தாளங்கின்னரி
தாருசேகுரு
நாகரீகமாகிய
சேகுருசேமந்தரி
தந்தரி (தேச)

வீரகண்டாமணி
விருதுகொடி
மீரிக்கலகலென்ன
பரக்கவே

(சுருள்) ஆருமெதிரில்லா
அந்தரதுந்தமி
கந்தமும்மாமலர்
தேரணிகளுஞ்சூழ
விந்தைமுழங்கிட
வாடைகள்வீச (தேச)

காசிராஜன்-கவி.

ஆதியாஞதியாகி அகிலகாரணமாயெங்கும்
சோதியாநின்றமூல சூஸ்திரப்பொருளதாகி
வேதமூலமதாய், ஞதவிந்துவா துரியதீதை
மீதினிவ்விளக்கும் ஞதன்மெய்யடிபோற்றிபோற்றி.

ஷை-கவி.

தந்திரயூகமந்திரி தருமமேபெருகவேண்டும்,
அந்தனற்சிபதங்கள் ஆலயம்காலபூசை
விந்தையாகுடிகள்நன்மை விளங்கியேதிங்கள்மாரி
சுந்தராநமதுதேசம் சுபேஷமாயரிவிப்பீரே.

வச்னம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நமது காசிதேசத்தில் முப்பத்திரெண்டு தர்மங்களும் சிவாலயம் விஷ்ணுவாலயம் பிற்மாலயம்முதலான ஆலயங்கள் திருக்காலபூசையும் அன்னநிபேதனம் அபிஷேக உச்சவமுதலானதும் குரைவில்லாமல் நடந்துவருகிறதா அதுவன்ணியில் அந்தணர்சிவதப சந்தியான்மும் நமதுதேசத்துக் குடிகளுக்கு சுபக்ஷேபம் பெற்றிருக்கின்ருர்களா மந்திரிகாள்.

மந்திரி வசனம்.

சருணம் சருணம் மகாராசனே தேவரீர் நீதிநெரிப்படியாதொன்றும் குரைவில்லாமல் நடந்துவருகுதையா சுவாமி.

காசிராஜன். கவி.

இன்பமந்திரியேகேளாய் என்தபம்தன்ஞல்வந்த
அம்பையம்பிகை அம்பாலருவைக்கு சுயவரம்சாட்டி
சீமாதிவரசறிங்கு சடுகெனவரவேவேண்டி
உம்பர்கள்புகழ்கற்னீகன் ஏருவனேவரச்செய்வாயே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே நமது குமார செல்வியான அம்பையம்பிகை அம்பாலிகையென்னும் மூன்றுபெண்களும் பருவகாலஸ்திரீகளாகியும் இதுவரையில் ஒருராசாதிபதிகள் வந்துகேட்டுபாணிக்கிரஹணம் செய்யாமல் இருக்கிறபடியினலே சுயவரம்சாட்டி அன்பத்தாருதேச ராசர்களைவரவழைத்து நமதுபெண்களை அழைப்பித்து மனதுக்கேத்த புருஷருக்குமாலை சூட்டும்படி சுயம்வரக் கடி

தம்யெழுதவேண்டியது கற்னீகனை அழைப்பிக்கவேண்டும் அதிக சீக்கிரம் நமதுகற்னீகனை அழையும்மந்திரிமார்களே.

பொது வசனம்.

அப்போது மந்திரிகள் கற்னீகனை அழைக்க அப்போது கற்னீகன் வருவது.

கற்னீகன் கவி.

தலையினில்பாகைவைத்து சரிகைவேஷ்டிகளும்பூண்டு
உலகினிலெவருமெச்ச உச்சிதப்பணிகள்மின்ன
நலமானதுகைகணக்கு நாடியேவிதமும்கொண்டு
கலைமதிமுகம்விளங்க கற்னீகற்வருகின்றாரே.

கற்னீகர் தரு

இராயசக்காரன்நானே அரசர்மெச்சும் (இரா)
தூயமன்னவர்சொல்லும் ஞாயங்களுக்குவகை
வாயாரதுகை சொல்லும் (இரா)
செகத்திலெந்தனுக்கெதிர் மிகுந்தகற்னீகருண்டோ
அகத்தியம்காசிராசன் அழைத்தவிதமறிய (இரா)
சொல்லுங்கணக்கிலென்னை வெல்லஒருவருக்கும்
வல்லமைகிடையாது வாயாடிதுகைசொல்வோம் (இரா)

வைத்தக்குரிப்பிரட்ட வசமோயெவர்களுக்கும்
சித்தம்மகிழ்ந்துகர்சி தீரன்சமுகம்நாடி (இரா)

கற்னீகர் வசனம்.

சருணம் சருணம் காசிமகாராசனே நம்மை அழைத்தவிபரத்தைதெரியச்சொல்லும் மகாராசனே.

காசிராஜன் கவி.

கடிகியேசபைக்குவந்த கற்னீகாசொல்லக்கேளாய்
வடிவம்பையம்பாலிகை வல்லியம்பிகைமூவருக்கும்
அடவுடனுலகிலுள்ள அரசர்களறியவேண்டி
திடமுடன் சுயம்பம் ஓலைசீக்கிரம்யெழுதுவாயே.

வசனம்.

கேளும் கற்னீகனே எனதுசெல்வியாண அம்பை அம்பிகையம்பாலிகை என்னும் சுந்திரமானபெணகளுக்கு சுயவரம் நாட்டியிருக்கிறது என்று மனதுள்ள மன்னவர்கள் வரும்படிக்கு சுயவர நிருபம்யெழுதும் கற்னீகனே.

கற்னீகர் நிருபம்யெழுதிவாசித்தல் வாசகம்.

ஸ்ரீமன்மகரமண்டலேஸ்வரா அச்சகாயசூற உத்தண்ட தோர்தண்டபாண்டீத்திய பிரவிகளைபிரவீணகரான அங்கவங்கசிங்களசீனக கொங்குவங்கள, கொச்சள மச்சள கரூட மரூட கண்டி கால்மீகர் முதலான அகண்ட மண்டலர்திபதிகளுக்கு காசி தேசாதிபதியான காசிமகாராசன் திருக்குமாரத்திகளான அம்பையம்பிகைஅம்பாலிகை என்னும் திவ்விய சுந்திரமான மூன்றுபெண்களுக்கு சுயவரம்நாட்டி இருக்கிறது நாளைய சுக்கிரவாரம் வந்துசேறும்படியாய் லிகிதமெழுதினேன் மஹாப் பிரபு.

காசிராஜன் வசனம்.

வாரும் மந்திரிமார்களே இந்தநிருபத்திற்கு மஞ்சள் காப்பு இட்டுவேகமுடைய சுகசாரணன் வசம் ஒப்பிவித்து சகலதேசத்து மன்னவருக்கும் தெரிவிக்கசெய்யும் மந்திரிகளே.

மந்திரி வசனம்.

அப்படியே தங்கள் மனதின்படியே செய்தேன் மகாராசனே.

பொது வசனம்.

தூதுவர்கொண்டுவந்த நிருபத்தையரிந்து சாளுவதேசாதிபதியாகிய சாளுவமகாராசன் காசிதேசம்நாடிவருவது.

சாளுவராஜன் கவி.

பாருலகில்மன்னவரும் வணங்கிச்சூழ
பாவையருமஷாமரைகள் யிருபால்வீச
பூரணச்சந்திரனெனவே முகம்சொலிக்க
பூரிகைபேரிகை டங்காடமாரமோங்க
தாரணியில்உள்ளவர்கள் புகழ்ச்சிக்கூற
தனுகெதைகேடையம் வாளும்கரத்திலேந்தி
சாரிபூரிபடைசூழ காசிநாட்டை
சாளுவபூபதியிதோ வருகின்றானே,

சாளுவராஜன் தரு.

தாரணிபுகழ்பெற்ற மாரன்வடிவையொத்த
சாளுவராசன்வந்தான் காசியைநாடி (சா)

(சுருள்) தேரணிகள்நெருங்க வீரர்மனம்நடுங்க
தேசதேசரும் வந்துநெரிங்கிட
காசிபூபதி கண்டுமகிழ்ந்திட (தா)

வச்சிரமணிமுடி மெச்சும்புயங்கள்மின்ன
வாக்குவல்லைய மிலங்க

(சுருள்) உச்சிதப்பலபணி நக்ஷத்திரம்போலேமின்ன
ஓதுமாமறை வேதியர்பாட
நாதகீதமும் மாதர்களாட (தா)

விருதுக்கொடிபரக்க அரசரடிவணங்க
வீணைதம்புரு பாடவே

(சுருள்) முரசுபேரிகைடங்கா வரிசையுடன்முழங்க
மோர்துமல்லரி சல்லரிபாடிட
பூதலத்தனவர்கண்டு நடுங்கிட (தா)

ஆனைபரிரதங்கள் சேனைமிகநடக்க
அமரரிதனை அதிசயிக்கவே

(சுருள்) காணகங்களுமெத்த வேணநகரம்தாண்டி
காசிபூபதி பெண்களைநாடி
தேசபூபதி வந்து கொண்டாடி (தா)

காசிராஜன் வணக்கம் குருங் கவி.

இராஜராஜேந்திரா ராஜகெம்பீரா
மாசிலாசாளுவ மன்னனேவாரீர்.

சாளுவராஜன் வணக்கம் குருங் கவி.

போசனேஉந்தன் புகழ்பெருங்கீர்த்தி
தேசமும்விளங்க தீரனேபோற்றி

காசிராஜன் வசனம்.

வாறும் வாறும் சாளுவபூபதியே இந்தசிம்மாதனத்தில் எழுந்தருளும் சாளுவபூபதிராசனே.

பொது வசனம்.

இப்படியாக சாளுவபூபதிவந்தபோது அனேகதேசாதிபதிகள் வருவது.

தேசாதிபதி கவி.

கொங்குவங்கணகன்னடர் குருதகொச்சலறுமச்சர்
சிங்களர்சீனரொட்டர் தேசருமாசிலாத
வங்கனறங்கதேம் தங்கமருடகாந்தர்
பொங்கமாமனேகதேச பூபதிவருகின்றாரே.

தேசாதிபதி தரு.

தேசாதிபதிகள்வந்தார் காசியைநாடி (தே)

தேசாதிபதிகள்வந்தார் ராசாதிபதிமெச்ச
ஆசையுடனேதிவ்விய இராசக்கன்னியைநாடி (தே)

முத்துக்குடைபிடிக்கவே யெங்கும்
வெற்றிமுர சடிக்கவே
தத்திமிதிமியென்று சங்கீர்தமாதாட
வொத்துநாகசுறங்கள் சுற்றுமுழங்கிடவே. (தே)

பம்பைதம்புருபாடவே இவரைக்கண்ட
உம்பர்மிகக் கொண்டாடவே
அம்மையம்பாளம்பிகை யருவையையைவேண்டியே
செம்பொன்முடியிலங்க சேனைமிகநடக்க (தே)

அண்டத்தமரர் வாடவேபஞ்சவாத்தியம்
எண்டிசையும் நாடவே
கண்டவிடங்களெல்லாம் கரிபரிசேனைநடக்க
மண்டலம்தூளிகள் மறைக்கசபைநிறைக்க. (தே)

காசிராஜன்வணக்கம் குறுங் கவி.

செல்வியைநாடிவந்த தேசாதிபதியேவாரீர்
உல்லாசமண்டபத்தில் ஒளிபெரயிருந்திடீரே.

தேசாதிபதி வணக்கம் குறுங் கவி.

வில்வலிகாசிதேசம் வேந்தனேபாதம்போற்றி
நல்லதப்படியேநாங்கள் நன்மையாயிருப்போம்மன்ன

காசிராசன் வசனம்.

வாருங்கள் தேசாதிபதிகளே அவா ளவால் இருக்கும்படி சபாமண்டபம் நவரத்தின கஜிதமாய் செய்துவைத்தேன் அதிலிரங்கி சந்தோஷமாக இருங்கள் தேசாதிபதிகளே.

பொது வசனம்.

இப்படி இருக்க அந்த சமையத்தில் அஸ்தினபுரி வேந்தனாகிய வீஷ்மாசாரியரும் அவர் சகோதரனாகிய சித்திரவீரியனும் காசிதேசம்நாடி சபையாகிய கொலுவுக்கு வருவது காண்க.

வீஷ்மாசாரி கவி.

அகிலமெல்லா மொருகுடையாளும்வேந்தன்
அதிரூபசந்தனவின் நருமைமைந்தன்
மகிபர்களும் வந்தடிகள்போற்றிநிற்க
மதிகுலம்தழைத்தோங்க வளரும்சீலர்
நருமணிகளிட்டிழைத்த பணிகள்மின்ன
நற்சிலையும்கேடையம் வாள்கையிலேந்தி
செகமுழுதும்புகழ்பெரவும் வீஷ்மாசாரி
சித்திரவீரியனும்மீரி கொலுவருகின்றானே.

வீஷ்மாசாரி தரு.

சந்தனராஜன்பெற்ற விந்தையுடையவீஷ்மா
சாரிக்கொலுவதாகிறுர் காசியைநாடி (சா)

(சுருள்) சிந்தைமகிழும்தம்பி சித்திரவீரியன்கூட
சேனைத்தலைவரும் யானைப்பரிகளும்
காணகத்திடபல ஏனமிரண்டிட (சந்)

காலைசூரியன்போலே வாலப்பருவமுள்ள
காய்கையரிதோவந்தார் தாரணியதிர (கா)

(சுருள்) கோலமணிகளாட ஆலவட்டங்கள்போட
குத்தமகத்திய சத்தியதீரன்
உத்தமதேவர்கள் பத்தியில்மீகரன் (சந்)

வில்லம்புகேடையம் வல்லையம்கட்டாரிபாக்கு
வீரவாளிகளேந்தியே அகிலமும்மெச்ச (வீர)

(சுருள்) மல்லிகைமுல்லைவில்லம் நல்லமலர்கள்சூட்டி
வாடைப்பரிமள ஆடைமிகுத்திட
தேடியபலவித நாடுகள்தாண்டி (சந்)

அண்டரெண்டங்களெல்லாம் அதிரபேரிகைடங்கா
ஆனைகள்வீரிடவே படைநடக்க (ஆ)

(சுருள்) கண்டவீரிய ரெல்லாம்
தெண்டமென்றே நடுங்க
காசிபூபதி னேசித்தருளியே

காசிராஜன் வணக்கம் குருங் கவி.

சந்தனராஜன்பெற்ற சத்தியந்தவறிடாதே
வந்தவீஷ்மரேவாரீர் மகிழ்ந்திருமண்டபத்தில்.

வீஷ்மாசாரி வணக்கம் குருங் கவி.

அந்தமும்கீர்த்திபெற்ற அதிபல்மன்னர்மெச்சும்
விந்தைசேர்காசிமன்ன மெய்யனேபோற்றிபோற்றி.

காசிராஜன் வசனம்,

வாரும் வீஷ்மாசாரியரே வாரும் சத்திரவீரியனே இதோநவ ரத்தினமயமான யிந்ததிவ்யமான, மண்டபத்திலே எழுந்தருளும் வீஷ்மரே.

வீஷ்மாசாரி வசனம்.

அப்படியே வீற்றிருக்கிறோம் ராசனே.

காசிராஜன் கவி

என்னருகேவல்செய்யும் யேந்திழையாளேகேளாய்
உன்னிதமனைக்கியேகி உலகெலாம்மதிசெயிக்கும்
கன்னியற்கரசியம்பை கருதியேயம்பாளம்பிகை
வறணபூஷணியாளெந்தன் மகள்தனையழைத்துவாராய்.

வசனம்.

எமது அரிகில் ஏவல்செய்யும் மாதர்களே நீங்கள் அரண்மனைக்குச்சென்று எனதுகுமாரத்திகளான அம்பையம்பாளம்பிகையென்னும்மூவரையும் திருமணக்கோலமாய் அலங்கரித்து சபைக்கு அழைத்து வாருங்களடி பெண்களா.

பொது வசனம்.

அப்படியே நல்லதென்றுசொல்ல அக்கன்னிகைகள் மூவரும் சபைக்குவருவது.

அம்பை அம்பிகை அம்பாலிகை கவி.

மஞ்சுமந்தருவைப்போலும் வானவஞ்சியரைப்போலும்
மிஞ்சியேஅரசரெல்லாம் மிகமையல்வழங்குமரூபி
கொஞ்சியேவல்லிசாதகொடியென யிடையுமின்ன
அஞ்சலியம்பையம்பாளம்பிகை வருகின்றாரே.

அம்பை அம்பிகை அம்பாலிகை தரு.

செம்பவள்வதனி அம்பையம்பாளம்பிகை
செல்வியிதோவந்தாள் தந்தையைக்காண (செ)

(சுருள்) பம்பரமென்னிரு கும்பஸ்தனங்கள்விம்மப்
பாலிகவகுண சாலிவசிகரி
கோலமாமணி மாலைதுலுங்கிட (செ)

முத்துமணியிலங்க கொத்துசரங்கள்மின்ன
முல்லைநகைதுலங்கவே வெகுஅதிவிதமாக (முல்)

(சுருள்) வெத்திரதியுமஞ்சு நதண்டகள்கொஞ்ச
வேதமாதவ ஞதிசிவரிட
மாதரிப்படி வந்ததோவென்ன (செ)

வாலைப்பருவமதுன்ன சேலைசரிகைமின்ன
மங்களமாதராடவே வெகுவிசித்ர (மங்)

(சுருள்) வேலைபழிக்கும்விழி மாலைப்பரிமளிக்க
மேனகப்பல் வானமாதர்கள்
ஊனமதகவ ரென்றுபுகழ்ந்திட (செ)

வில்லும்புருவமென்ன சொல்லுஞ்சொகுசுடனே
மெல்லியர்புடைசூழவே வேடிக்கையாக (மெ)

(சுருள்) சல்லரிபேரிகை மல்லரிகளும்பாட
சாரியாகவே வீரியமன்னர்க்
கோரிப்பல னேருமோவென்ன (செ)

அம்பை குருங் கவி.

சீருனசாசிநகர் செங்கோல்நெறிதவரு
தாரணியோர்போற்றுகின்ற தந்தையரேபோற்றி.

காசிராஜன் கவி.

மாருதயென் தபத்தால் வந்துதித்தகண்மணியே
போானசெல்வியரே பெருமையுடன்வாழி

அம்பை கவி.

தேசாதிபதிமன்னர் சேர்ந்திருக்கும்கொலுவடி
பாசமுடன் அழைத்த விதம்பகருவீர்தந்தையரே.

காசிராஜன் கவி.

தேசமுள்ளராசர்களே நீங்கள்மணம்தான்புரிய
ஆசையுங்கள்மனமரிய வரவழைத்தேன்.

காசிராஜன்-கவி.

அன்புள்ளகண்ணேதேனே அருமைசெல்வியரேகேளாய்
உன்னிதசுயவரம்சாட்ட உயர்முடியரசர்வந்தால்
வன்னபூஷணமேயிங்கு வந்திடுமரசற்குள்ளே
மன்னியேமனதுக்கேத்த மணமாலைசூட்டுவீரே.

வசனம்.

வாரும் எனது குமாரச்செல்விகளே உங்களுக்கு மணஞ்செய் விக்கும்படி சுயம்வரம்சாட்டி சர்வதேசாதிராசர்களுக்கு சுயம்வர நிருபம்தெரிவிக்க தேசாதிபதிகள்வந்து இருக்கிறூர்கள் மனதுக்கே த்தஅரசருக்கு மணமாலை சூட்டிவாரும் செல்விகளே.

அம்பை வசனம்.

அப்படியே தங்கள் உத்திரவின்படி நடந்துகொள்ளுகிறேன் தந்தையே.

அம்பை கவி.

சதியெனும்விசாலாக்ஷி சந்திரவதனிக்கேளாய்
மகிதலமன்னரெல்லாம் வந்திடும்வரைக்கண்டு
புகழ்பெருவதனமுள்ள புகழ்ச்சியும் மதனைப்போலே
வகையான அரசருக்கு மாலைசூட்டிடுவோம்வாராய்.

வசனம்.

ஆ! அம்மாவிசாலாக்ஷி! அடிமோகனாங்கி! ரதிரூப சந்திரவதனிஎங்கள்மூவரையும் நாடி ஐம்பத்தாறு தேசாதிபதிகளும் வந்து நெரிங்கியிருக்கிறார்களேநாம் எல்லோரும்ரவைசல்லாவை மூடுபோடுக்கொண்டு அவரவர் கூடாரங்களைபார்த்து மனதுக்கேற்ற ராசாக்களை நிக்ஷயஞ்செய்துவருவோம் வாரும் எனது சகிமார்களே.

அம்பை தரு.

வாராய்சகிமாரே வந்தமன்னவர்
கூடாரம் தன்னைக்காண (வா)

தாதி தரு.

பாராய்நீயென் தாயே யிந்த
பாரியமன்னவர் கூடாரம் (பாரா

அம்பை;—இந்தஅரச ஞரோசகி
இவர்வேண்டாம் நீகட தங்கையரே (இந்)

தாதி :— அந்தஅரசனை நீபாரும்
அன்னமேஉன்னித கன்னியரே (அந்)

அம்பை:—வேண்டா மிவரெனக்குஅம்மா
மீரியராசாவை பாரடிநீர் (வே)

தாதி :— தீண்டமன தில்லையோ அம்மா
தேசாதிபதியான ராசரிவர் (தீண்)

அம்பை:—வாடியிவரெனக்கு வேண்டாம்
மன்னவர்கூடாரம் தன்னருகே (வா)

தாதி :— தேடியுமக்கேற்ற அம்மா
செல்வக்குமாரனை நீபாரும் (தே)

அம்பை:—தாதியேயென்ன சொல்வேனம்மா
தகுமான அரசனை காணடி (தா)

தாதி :— சோதிமுடி மன்னரிப்போ
தொட்டிடகாணுவோம் கட்டழகி (சே)

அம்பை:—வெகுதேசமன்ன ரெல்லாம்கண்டு
வீணாகினேன் இன்பம் தோணமலே (வை)

தாதி :— தகுமான புருஷரிங்கேவந்து
தையலேகாணுவா மெய்யழகி (தகு)

அம்பை:—மாராதபார்ப்பவ   ராரடியிந்த
மன்னவருமெத்த   உன்னிதமோ (மா)

தாதி:— தாராபுகழ்   படைத்தயிவர்
சானுவபூபதி   யாளனம்மா (தா)

அம்பை:—சிங்கார   கூடாரமிதோ
தெரியுதுபாரடி   அரிகிலமே (சி)

தாதி:— திங்கள்குல   வீஷ்மாசாரி
சித்திரவீரியர்   உத்தமர்கள் (தி)

அம்பை கவி.

எங்கெங்கும்நிறைந்திருக்கும் எழிலான அரசர்க்குள்ளே
சிங்காரஒய்யல்கூடாரம் சித்திரமோ அதுவிச்சித்திரம்
பங்கையவதனமுள்ள பதிமுகத்ததிவிந்தத்தை
தங்கினன்பார்க்கவேண்டி தையலேயிருந்திடீரே.

வசனம்.

அதோ வாருங்கள் சகிமார்களே எனது பிரியமான தங்கைமார்களே இவ்விடத்திலேவந்து நெருங்கிய கூடாரங்களில் இதைப்போலும் விச்சித்திரம் பார்த்ததில்லை இதற்குள்ளிருக்கும் இராசகுமாரர்களைப் பார்த்தால் மன்மனையொத்த வடிவமா இருக்கிறார்கள் ஆகையால் இவ்விடத்தினின்று சற்றுநேரம் பார்க்க மனதாய் இருக்கிறேன் நீங்களும்பாருங்கள் சகிமார்களே.

தாதி வசனம்.

அப்படியே நல்லது அம்மா தாயே.

அம்பை தர்க்கம் தரு.

சிங்காரகூடாரந்தங்கு   மகிபதியாரோ அடி
தங்கையேயெனக்குநீ   சங்கையரச்சொல்லும்தாதி (சிங்)

தாதி:— பொங்கமா   யஸ்தினபுரியாளு
மகிபதி   தாயோவேவரே
திங்கள்குல   வீஷ்மர்
சித்திரவீரிய   ரம்மா (பொ)

அம்பை:—மன்னமன்னவர்   கெல்லாம்
உன்னிதமாகிய   மன்னரிவர்
கன்னல்   மதனென்று
இன்னிலம்   துதிக்குமேதாதி (மன்)

தாதி :—அன்னநடை மயிலாளே
இவர்மெத்த வீரர்யென்றும்
சொன்ன மொழி
பிசகாதமகி பாலரம்மா (அன்)

அம்பை:—ஒளிகொண்ட மணிமுடி
மதிமுகவதனத்தை ப்ராயம்மா
எளிதல்ல கூறவும்
இவர்போலே எங்கும்கண்டதில்லை (ஒளி)

தாதி :—களிகொண்ட கன்னியே
இவர்போலுலகில் மன்னரேது
துளிர்கொண்ட மேனியை
மணமாலை சூடிமிப்போது (களி)

அம்பை:—வந்தஅரசற் குள்ளே
எந்தனுக் கேற்றவரம்மா
இந்த அரசனுகும்
மினிவேரே இச்சிப்பதேது (வந்)

தாதி :—விந்தைமன்ன வருக்கு
மிஞ்சினஅரசர்க ளுண்டோஅம்மா
சந்தோஷ மாகவே
தாயேமாலை சூட்டும்

வீஷ்மாசாரி கவி.

சூரதூதுவரேயொன்று சொல்லுவேன்கேளுமிப்போ
நேரானமாதர்வந்துநேசித்து இருக்கக்கண்டேன்
வீராதிவீரருனவேந்தர்கள் கூருகின்ற
காரியம்வந்துகண்டு கடுகனவுரைசெய்வாயே.

வசனம்.

வாரும்தூதுவர்களே காசிராசன் குமாரத்திகள் மனதுக்கேற்ற இராஜகுமாரர்களை பார்க்கும்படி வந்தார்கள் அந் தந்தராசாக்கள் கூடாரத்தைக்கண்டு சற்ருவது தங்காமல்வந்து நம்மிடக்கூடாரத்தைக் கண்டு நெடுநேரம்வரையிற் பார்க்கிறபடியினாலே எங்கள் மனது இச்சைக்கொண்டவளாக காண்கிறது நீங்கள் மற்றராசாதிபதிகள் என்ன வசனிக்கிரீர்கள் அதை யரிந்துவாருங்கள் தூதுவர்களே.

தூதுவர்கள் வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி யரசே.

சாளுவராஜன் கவி.

சீர்புகழைம்பத்தாறு தேசமன்னவரேகேளீர்
ஏர்பெரும்குலத்துவேந்தர் எல்லாரும்நாமிருக்க
பார்புகழ்செம்படத்தி பாலகர்தனையிச்சிக்கும்
நேரிதுபெண்கள்புத்தி நிலத்திற்குரியதாமோ.

வசனம்.

ஆ ஆ கேளுங்கள் ராசாதிபதிகளே சோமசூரியாக்கினி வம்சத்தில்வந்த மகாக்ஷத்திரிய நற்குலவேந்தரான நாமெல்லாமிருக்க செம்படத்தி வயற்றிலுதித்த ராசாதிபதிகளை இச்சிக்கும்படியான பெண்கள் புத்திதான் என்னபுத்தி அய்யய்யோ அவர்கள் தலைவிதியை அரிகிலேன் ராசாதிபதிகளே.

தேசாதிபகள் கவி.

மதியிலாகாசிராசன் மகவையைப்பெற்றுமென்ன
துதிபெரும்மன்னருக்கு சோபனம்முடித்திடாமல்
குதிகொள்ளுபசுயவரம் நாட்டிகுலந்தனைக்கெடுத்துக்கொள்ள
விதிவசம்வந்திருக்க வேஷமோசொல்லுவீரே.

வசனம்.

கேளுங்கள் ராசாதிபதிகளே காசிராசன் திவ்விய சுந்தரமான பெண்களை பெற்றதினாலென்ன சரியொத்த ராசாதிபதிகளுக்கு பாணிக்கிரஹணம்செய்யாமல் புத்தியத்து சுயவரஞ்சாட்டி தன்குலத்தைக்கெடுத்துக்கொள்ளவும் மனதுள்ளவருக்கு மாலைசூட்ட பெண்களைவிடுத்தான் அப்படிவிடுத்து குலப் பழுதுவா விதிவசமிருக்க காசிராசனுக்கு வெழ்க்கமேது அந்தப் பெண்களுக்குதான் புத்தியேது நமக்கென்ன பேசாதிருங்கள் ராசாதிபதிகளே.

அம்பை அம்பிகை அம்பாலிகை தரு.

இதுயென்னபுதுமைஅரசரெல்லாம் — இகழ்ந்திடும்பெருமை
அதிவிதமரியாமல்பதரியே — மையல்கொண்டேன்
சதியிதுவோவென்ன — விதியேதோஅரிகிலேன் (இது)

நங்கையேவாரும் — இவருடையஅங்கமும்பாரும்
செங்கையழகுடைய — நீரைப்போலவே
எங்கும்கண்டதில்லை — இவர்தானேயேளிமை (இது)

ஆசைக்கொண்டேனேவீணாய் — அரசர்பேச்சைக்கண்டேனே
மோசம்வந்ததையோ — பாசங்கள்வெருத்திட
மாசிலாதனிந்த — மன்னவரிகழ்ந்திட (இது)

என்தலைவிதியோ அரசருக்கு இதுவென்னமதியோ
வந்திடும்காரியம் பிந்தியரியலாகும்
சிந்தைமகிகூஷியாய் சேருவோம்பதிநாடி (இது)

அம்பை அம்பிகை அம்பாலிகை கவி.

என்னடிபாங்கிமாரே எங்களைநாடிவந்த
மன்னவர்தன்னையெல்லாம் வகையுடன்பார்க்கும்போது
இன்னிலமன்னர்க்குள்ளே இவர்மீதுஇச்சைக்கொண்டேன்
சொன்னதையரியவேண்டி சுருக்குடன்நெருங்குவோமே.

வசனம்.

கேளுங்கள் சகிமார்களே எங்களை நாடிவந்த ஐம்பத்தாருதேசாதிபதிகளை பார்த்து இவரேநாயகரென்று மகிகூஷியடையும்போது மற்றராசர்கள் இககூஷிசெய்வதை யரியவேண்டும் நமது இருப்பிடம் போய்சேறுவோம் வாரும் சகியார்களே.

பொது வசனம்.

அப்படியே நல்லதென்று போகதூதுவர் வந்துவீஷ்மாசாரியைக்கண்டு சொல்லுவது.

தூதுவர் வசனம்.

சரணம் சரணம்மையா வீஷ்மாசாரியே ஐம்பத்தாறு தேசாதிபதிகள் தாங்களே சரியான குலமென்றும் நீங்கள்வலையர் குலமைந்தர்களென்றும் நாங்கள் இருக்க உங்களை இச்சிப்பதென்ன புத்தியென்றும் இகழ அப்பெண்கள் சங்கைப்பட்டு தமது இருப்பிடம் போனார்களையா சுவாமி.

பொது.

தூதுவர்கள்சொன்னமொழிகாதில்கேட்டு
சுரிக்கிட்டுஇருவிழிகள் பொறிபறக்க
பூதலத்துமன்னரெல்லாம் நடுநடுங்க
புவியேழும்ஆக்கரித்து எழுந்துசீறி
வாதையுடன் தனுவாள்கேடையம்
கட்டாரிவல்லுலக்கை கெதைகரத்திலேந்திவீஷ்மர்
போதபலவிருதுடனே சித்திரவீரன்
போர்செய்யஅரசர் முன்வருகின்றாரே.

வீஷ்மாசாரி தரு.

குலத்திலதிகவீரபலத்தை   நாமறியவே
கொண்டேன்பலபகழி   நான்நொடிக்குள்ளமன்னரை
கண்டேன்   விடஇகழி
சுலத்திலதிகமான   சாம்பசிவன்வந்தாலும

(சுருள்) தாக்கிடுவேனேஉயிர்   போக்கிடுவேனேயிங்கே
தத்திகுத்தியே   இந்தலமன்னரை
வெத்திதுதித்திட   குத்திஇருத்துவேன்.   (குல)

தன்னைபுகழுகின்றமன்னர்   மன்னவர்களோ
சாதியில்பெரியவர்கள்   உலகுக்கேற்றபூதலமுறியவர்கள்
என்னைபழுதுரைக்க   இவ்வுலகத்திலுண்டோ?

(சுருள்) எட்டியேஅடிப்பேன்   வாளால்
வெட்டியேமடிப்பேன்   இப்போ
இந்திரர்தந்திரர்   வந்திடுமந்திரர்
விந்தையிலரசரும்   வெல்லுவதுண்டோ   (குல)

புலியது இளைக்குமா   பூனைப்பெண்டாளுமோ
புகழ்கீர்த்தியறியாதோ   உலகில்
மன்னர்மிக   வண்மைதெரியாதோ
வலியமன்னவருக்கு   வாய்மதமுரையேது

(சுருள்) வாட்டிடுவேனேபிள்ளை   ஓட்டிடுவேனேயிதோ
வாளிகளட்புறாதூளிகள்   கட்டியே
கோளரிபோலவே   மீளவும்வந்தேன்   (குல)

பங்கமுரைக்கவந்த   இங்கிர்தமரியா
பார்மன்னரை   பதைக்கசதைப்பேன்
நிமைக்குளாக   போர்புரிந்தேவதைப்பேன்
சங்கையில்லாமலே   தாழ்வானமொழிசொன்ன

(சுருள்) சாளுவன் தானேகோபம்   மீளுவதேனோஅவனை
தட்டிகொட்டியே   கட்டிநெட்டியே
வெட்டியெரிந்திட   அட்டிகளேது   (குல)

வீஷ்மாசாரி கவி.

சிங்காணிசிலைக்கையேந்தும் சித்திரவீரியனேகேளாய்
பங்கமாபழுதுசொன்ன பார்த்திபர்பதரிவாட
மங்குலபூமியெங்கும் மரையவேசரக்கனேவி
திங்கள்சேர்குளம்விளங்க திரனேவருகுவாயே.

வசனம்.

கேளும் தம்பிசித்திரவீரியனே இங்கதேசமன்னர்கள் இகழ்ந்திட என்னகர்வம் படைத்தார்கள் நல்லது இந்தக்ஷணமே உனது கைவில்லைவளைத்து அண்டபிண்டம் நிரையபாணமேவி யாவரையும் அட்டகாசஞ்செய்து நமதுசந்திரகுலம் பிரகாசிக்கவாரும் தம்பிசித்திர வீரியனே.

சித்திரவீரன் கவி.

தமையனேநின்பொற்பாதம் தலைமிசைசூட்டிக்கொண்டேன்
நிமைமுடிதிரக்குமுன்னே நெடுதானவில்வளைத்து
அமையுருமன்னரெல்லாம் அவையவம்பிதிரிட்டோட
சமையமேசமர்கள்செய்ய தாட்டிகமரிகுவீரே.

வசனம்

சரணம் சரணம் அண்ணாவே தேவரீர் பொற்பாத கமலங்களுக்கு அடியேன் நமஸ்கரித்து நெடிதான வில்லைப்பூட்டி இதோ யெதிரினிரா யிருநின்ற தேசமன்னவர் சண்டமாருதவாயில் இலவம் பஞ்சாகபாக்கடிக்குரேன் எனது வல்லமையை பாரும் அண்ணாவே.

சித்திரவீரியன் நொண்டிசிந்து.

சண்டப்பிரசண்ட மூடனே சித்ர
வீரனெழுந்து வெகுரோஷமுடனே
மண்டியிட்டு சினமீரிமீசை
படபடவென்றுமே தான் துடிக்க
சிங்கம்போலத்தானெழுந்து சித்திரவீரன்
சினமதுகொண்டுமே மனமகிழ்வாய்
அண்டரும் தேவர்களும்கண்டு
அனைவரும்சந்தோஷம் கொண்டிடவே
கங்கைமைந்தனளித்த வார்த்தைகண்டு
கெக்கலிகொட்டியே யவன்பக்குவமதாய்

முடுக்குடன் தானெழுந்து விரதீரன்
முன்னேவந்துநின்று னவன் தன்னுடனே-தத்தோம்

சித்திரவீரியன் சண்டை தரு.

தேசமன்னவரே வாருங்கள்
எந்தன்சமர்த்தை சற்றேபாருங்கள்
(சுருள்) மாசிலாதகுல மன்னவர்நீங்களே
மாட்டித்தனுப் பூட்டிக்கணை
மீட்டிசரம் ஓட்டிவிட (தேச)

தேசாதிபதி தரு.

சித்திரவீராயென்ன சொல்லடாசொல்லி
செயிக்கவந்தாயோ முன்னேநில்லடா
(சுருள்) எத்திசையும்புகழ் பெத்தமன்னவரென்றுமே
எண்ணுமலேகுண்ணுமலே நன்னுவரலன்னுதடா (சித்)

சித்ரவீரியன் தரு.

சேனையானைக்கூட்டம் வெல்லுமோஒரு
சிஙகக்குட்டிதன்னை கொல்லுமோ
(சுருள்) மானேகெற்சிதம்கொண்டு யானைமீதுவந்து
நலமாகவேபலவாளிகள் பலமாகியசளியாமலே (சே)

தேசாதிபதி தரு.

புலியொருபூனைய தாகுமோயெங்கள்
புகழ்பெற்ற வீரியம்போகுமோ
(சுருள்) வலியபடையுடனே வந்தெதிர்த்துமுன்னே
மாராசரம்மீரிவிட பாராயுனை கூராகவே. (புலி)

சித்திரவீரியன் தரு.

மலைக்குவச்சிரமென்ன பாரியோமூடா
வந்தெதிர்த்தால் மீளப்போரையோ
(சுருள்) குலைக்கும்நாயைப்போலே கொஞ்சவசனம்சொன்னீர்
கொத்தோடவே அத்தேபடைத்ததிவிழசதைப்பேனிதோ

தேசாதிபதி தரு.

வெல்லவந்த சிறுபையலே
இங்கேவீணாய் மடிவாய்கையிலே
(சுருள்) சொல்லாதும்சொல்லியே வெல்லவந்தியோவாடா
தூக்கியேபடைதாக்கியே உயிர்நீக்கிஉனைமாய்க்கவரும்

சித்திரவீரியன் தரு.

விட்டகணையாலே வாடுதே
படைகெட்டு முரிந்திட ஓடுதே
(சுருள்) அட்டியேது உன்னை வெட்டிமடிக்குறேன்
அங்கமதுப்பங்கப்பட எங்கைசிரமஞ்சாதடா (வி)

தேசாதிபதி தரு.

தீரமேதுவந்து பாரடா இப்போ
இதன்திசை நமன்பதிசேரடா
(சுருள்) போருக்கு அஞ்சாத வீரியர் முன்வந்து
புரியாமலேவெரியாடியே சிருவாயுனையரிவேனடா (தீர)

சித்திரவீரியன் கவி,

வாழ்வதுஒருவர்பங்கோ வல்லமைஒருவர்பங்கோ
ஆழ்கடல்சூழுகின்ற அகிலமன்னவரேயுங்கள்
ஊழ்வினைப்பயனால்வந்து உடலங்கள்வெவ்வேராக
தாழ்வானகுலத்துவேந்தன் சவுரியமரிகுவீரே.

வசனம்.

கேளுங்கள் ராசாதிபதிகளே வாழ்வும் வல்லமையும் ஒருவர்பங்கல்ல கிட்டாதபொருள்மேல் இச்சைப்பட்டால்வருமோ கடல்சூழ்ந்த உலகமன்னவர்கள் யெல்லாம் வந்துகெட்டு முரிந்துபங்கமடைய உங்கள் ஊழ்வினையோ நல்லது தாழ்வானகுலத்து மன்னவன்சவுரியத்தை சற்றுநேரம் பாருங்கள் ராசாதிபதிகளே.

தேசாதிபதி தரு.

ஏதுக்கித்தனைவீரிய தீரம்பேசுராய்
இகழ்ச்சிபேசியேசெருக்கு மிஞ்சியேவீசுராய்
தூதரைவிட்டு நாமுமேகட்டி
துண்டம்துண்டமாய் உந்தனைவெட்டி
பாதலம்பூதல முற்றும்நடுங்கிட
பலபலகணைகளை விட்டுஓடிங்கிட (ஏ)

சித்திரவீரியன் தரு.

மாராவீரியம்பேசி யெதிர்த்திடும்மன்னனே
மடிந்திடும்படைகளும் முரியடசொன்னேனே
வீராஉன்னிட காரியமரிவேன்
வெற்றிமிகுத்திடும் வீரியம்தெரிவேன்

தாருமாராகவே படைகளைவாட்டி
சவுரியமரிவேன் பாணமும்மீட்டி (மா)

தேசாதிபதி தரு.

கத்திகேடையம் கைலேந்திதோவந்தனே
கடிகிப்படைகளை வாளுக்கேயிரைதந்தனே
சற்றும்பயமில்லா சித்திரவீரா
தாண்டிகுதித்தெதிர் வந்துதைப்பாராய்
அத்ரசித்தரும் தேவரும்வாட
அடிபடமடிபட மீரியரசாட (க)

சித்திரவீரியன் தரு.

கேடையம்வாளுமேகொண்டு யெதிர்த்தோசாடினேன்
கெட்டுமுரிந்திட உன்னிடப்படைகளைதேடினேன்
வாடாஉன்னிட தலையரவாட்டி
வானவர்மெச்சிட வீரியம்காட்டி
கோடாகோடியா சேனைமடிந்திட
குத்திஇருத்தியே உதிரம்பெரிகிட (கே)

தேசாதிபதி கந்தார்த்தம்.

என்னடாசித்திரவீரா யெழிலானகுலத்துவேந்தன்
மன்னவருடனேவந்து மகாவலுகூருகின்ற
உன்னையும்பின்னேவந்த உச்சிதப்படைகளெல்லாம்
சின்னப்பின்னங்களாக செய்கிறேன்.

ஷை தரு.

சிலையெடுத்தேனே கணைக்கு
மந்திரபலங் கொடுத்தேனே
உலகிலதிவித படைகளஞ்சிட
வலவனும்பரி தலைகளத்திட (சி)

சித்திரவீரியன் கந்தார்த்தம்.

குலத்தினிலதிகமென்று கொஞ்சமாயெனையிகழ்ந்த
நலத்தையுமரியவேண்டி மானிலத்தவர்கொண்டாட
வலித்ததோள்மன்னரெல்லாம் வாடியேசிதரியோட
சலத்துடன் வில்லைபூட்டி

ஷை தரு.

சரந்தொடுத்தேனே உங்கள்மீதுவரவிடுத்தேனே
இரதமும்சாரதிகரிகள் பரிகளும்உருளஉருவமும்
குறிகிப் பெரிகிட (சர)

தேசாதிபதி கந்தார்த்தம்.

தேசாதிபதிமன்னர் மன்னரெல்லாம்
திரள்கூட்டங்கூட்டமுடன் வந்தெதிர்க்க
கூசாமல்நீயொருவன் சமர்கள்செய்யக்
குறிகிடவேயஞ்சிமனம் பின்னிட்டாலும்
மாசிலாகண்டரும் தோளுவதேசம்
மன்னவரும்பின்னிடுவ தொருக்காலுண்டோ
பேசாதேநீர் விரதனுவைப்பூட்டி

ஷை தரு.

பிடித்தேன்பாராய்அஸ்திரம் கோடிவிடுத்தேன்பாராய்
விடுத்துஉந்தனை அடித்துப்படைகளை
பதித்திடும்படி திடத்தையரியடா (பி)

சித்திரவீரியன் கந்தார்தம்.

கெடிபொவந்தெதிர்த்த கீர்த்திமன்னவரேகேளாய்
இடியெனயாக்கரித்து இருவிழிப்பொரிபரக்க
படியுலகத்தோர்வாடப் பலவரும்திகில்பட்டோங்க
கடிகியே வில்லைப்பூட்டி.

ஷை தரு.

கணைதொடுத்தேனே உங்களைவெல்லதுணிவெடுத்தேனே
அணிவுபேசிய அணிஉடைந்திட
பணியமன்னவர் நிணமும்தத்திட (க)

பொது விருத்தம்.

பரிமளக்கேந்திமைந்தா பலமன்னனுடனெதிர்த்து
அருஞ்சரம்தன்னைம்பூட்டி அதோகெதியாகவாட்டி
வருகவேகெங்கைமைந்தன் மட்டில்லாகோபமீரி
தரிபடதனுவைப்பூட்டி அதோகெதியாகவாட்டி

வசனம்.

இப்படியாக சித்திரவீரன் அனேகம்பல ராசர்களை ஜெயம் பெற்றுவருகிறபோது காங்கையருன வீஷ்மாசாரிக்கு கோபம்மீரி சாளுவனை யெதிர்த்துசொல்வது.

வீஷ்மாசாரி கவி.

எங்களைஇகழ்ந்துசொன்ன இலகுசாளுவனேகேளாய்
உங்களைப்போலேமன்னர் உலகத்திலெவருமுண்டோ
பங்கமுமடையவந்து பதரியேஇககூறிசெய்த
தங்கையேநாவைவாட்டித் தாக்குவேன்யெதிர்த்துவாடா.

வசனம்.

அடா வாடா சாளுவனே நீங்களே குலபுத்திரர்க ளென்றும் சவுரியமுடையவர்க ளென்றும் புகழ்ந்துயெங்களை தாழ்வானவர் களென்று மிகழ்ந்தநாவை துணித்துநிணைக்குடல் யெடுக்கிறேன் எதிர்த்துவாடா பயலே,

சாளுவன் சண்டை தரு.

வீரியம்பேசியே விஷமாசாரியே
வெகுண்டு வில்லெடுத்தேன்பாரடா
வெற்றிபெற்றிட வந்திடுமெந்தனை
வெல்ல வல்லவராரடா
சாரதிபுரவியை தலையாசாடுவேன்
தாண்டியேயுந்தனை துண்டாய்போடுவேன்
மீறிமீறியே சேனைகள்மடிபட
விண்டலம்மண்டலம் கண்டுநடுங்கிட (வீ)

வீஷ்மாசாரி தரு.

வந்துயெதிர்த்திடும் சாளுவராசனே
வல்லமைப்பேசுவ தேதடா
மாராவீரியனுனே யென்றிடும்
வார்த்தையும் பெருஞ்சூதடா
முத்தும்பரிகரி சேனையும்மடிபட
முடிகியேரதுசாற தியடிபட
இந்திரதேவர்கள் எந்தனையெச்சிட
எதிர்த்துவந்தனன் வெற்றிகள் பெற்றிட (வ)

சாளுவன் தரு.

ஆனைக்குதிரைகள்சேனைமடிந்திட ஆறுயுதிரமோடவே
அண்டத்தமரர்கண்டு நடிங்கிடஅமோகபாணம்போடவே
சொனைமாரிபோலவே சரங்கள்வருகுது
சூறுஉன்னிடமேனி உருகுது

நானேவந்தேன் உன்னைமடித்திட
நடுக்கியேநீமனம் மெத்தபதைத்திட (ஆ)

வீஷ்மாசாரி தரு.

மதித்துபேசியே வாயைப்பிளந்து
மணிக்குடலையு மெடுக்குறேன்
மண்டைச்சிதரிட படைகள்பொடிபட
மாரன்கணை விடுகுறேன்
மதித்து யுமே வந்தையோவாடா
மாட்டிப்பிதரிட வாட்டுவேன்போடா
தத்தியெழும்பியே பதைத்துமீரியே
கொல்லவேவந்தேன் வல்லதுதெரியவே (ம)

சாளுவன் கவி.

தம்பியுடனெதிர்த்துவந்த வீஷ்மாசாரி
தாரணியில்காசிபதி நாடிவந்த
அம்புவியில்மன்னரெல்லாம் வெல்லவேண்டி
அச்சமத்துவந்திதுவோ கூட்டமான
சிம்பமதைக் கொல்லுதற்குவீரம்
கூரிதிரமானகரியொன்று யெதிர்த்துவந்தாய்போல்
நம்பிவந்தஉங்களை நான்வெல்லவேண்டி
நாடிவந்தேன் நீயோடிப்பிழைத்திடாயே.

வசனம்.

கேளும்வீஷ்மரே எனதுதம்பியும் நீயுமாக ஐம்பத்தாறுதேசத்தாசர்களை வெல்லவந்தது எப்படியென்றால் சிங்க கூட்டத்தைக் கண்டுமும்மதம் போன்றயானையானது வெல்லுதற்கு வீரம்பேசி வந்ததுபோலாச்சுது நல்லது உன்னைக்கொல்லும்படி பாணம் வருகிறது ஓடி உயிர்பிழையும் வீஷ்மரே.

வீஷ்மாசாரி சண்டை தரு.

சாளுவபூபதியினுடைய வல்லமைக்கண்டனே
தனுவிலேந்தியே பாணத்துக்கெதிர்கொண்டனே
கேளுமுன்னிடபடைகளும் பொடிபடவென்றனே
(சுருள்) கர்வமேதடா அரியவல்லமைதுண்டனே
கெங்கையளித்தமைந்தன் திங்கள்குலசெனென்று
எங்குந்துதிபெறவே பங்கமழிவதே

ஏரிவந்தாய்மனம்தெரிவந்தாய் வலுகூரிவந்தாய்என்னே
மீரிவந்தாய்யேதுக்கித்தனே பெருமைகள்பேசியே
வாதுக்கித்தனைவந்து வீசியே (சா)

சாளுவன் தரு.

வந்தெதிர்பேசி பேசியேவீஷ்மாசாரியே
மனத்திலச்சமகத்தியே வந்தாய்மீரியே
விந்தையானபரிரதமுட ஞனிதோவாரியே
வீசியெரிந்திட வல்லமையுண்டுதெரியே
மெய்யாஉன்படைகளும் நய்யும்படிக்குகணே
(சுருள்) மெய்யிலுருகும்படி அய்யமேதடாவிட
வீசிவந்தாய் வீரம்பேசிவந்தாய்
மனங்கூசிவந்தாய் ரதவாசிகளேகணைவிடுத்து
சாரதிபடைகளும் பொடிபடமடித்து
வீரியங்கூட்டுவன் கெடிபெர (வந்)

வீஷ்மாசாரி தரு.

குதிரைசாரதிபடைகளை விட்டுபோவனே
குவலையமன்னர் நடுங்கிடாததேவனே
மிதமில்லாகீர்த்தி அடங்கவீஷ்மாவனே
மெல்லியையவிட்டுமே கெங்கைமைந்தனுவனே
வீரமுள்ளசூரர்களும் மீரிவந்தமர்புரிய
பாருலகோர்மெச்சிடவே வீரங்கெடுப்பேனிதோ
பத்திடவேகணை தத்திடவே யுனைசுத்திடவே
மீரிகுத்திடவேயிங்கே பாசமாகவந்தயாவைகளித்திட
மோசமென்றுசில மன்னரொளித்திட (கு)

சாளுவன் தரு.

மிக்கவீரியம்பேசி எதிர்த்திடும்வீரனே
வெல்லவந்தையே வல்லமன்னரைசூரனே
திடுக்கிடும்படி சரங்கள்வருகுதுதீரனே
செகத்திலெந்தனை வெல்லவுமுண்டோகோரனே
தீராவந்திடுமுன்னே பாராயொருநொடிக்குள்
ஆராயுதிரமோடகூருய் போடுவனிதோ
ஆட்டிவிட்டேன் கணைப்பூட்டிவிட்டேன்
வீரங்கட்டிவிட்டு விட்டேன்மீது
டேன்

அண்டரெண்டரும் நடுங்கிவாட
கண்டவிடமெல்லாம் பிணங்களாட

வீஷ்மாசாரி கவி.

அரிவில்லாசாளுவனேசொல்லக்கேளாய்
அடல்வேந்தர்தனையிகழ்ந்த ஆண்மையேது
பெரிதானமன்னரெல்லாம் பின்னிட்டோட
பேய்பூதம்கொண்டாட கவந்தமாட
வரிசிலேயேவாங்கி சமர்மாரியாக
வையகமும்தத்தளிக்க நொடிக்குள்ளேவி
கரிபரிகள்சேனையெல்லாம் தும்சமாக
கண்டிக்கவந்தெதிர்த்தேன் அரிகுவாயே.

வசனம்.

அடாவாடா அரிவில்லாத சாளுவனே மகாகீர்த்திப் பிரகாசம் பொருந்தியே சந்திரகுலமன்னரென்று சற்றுவது அரியாமல்யிகழ்ந்த வசனங்கள்கூர ஆண்மையேது இதோ என்கைவில்லேவாங்கிசரமாரியாக பாணமேவி இரதகஜதுரகபதாதிகளெல்லாம் சின்னாப்பின்னப்பட நிர்த்தூளிப்படலமாகஅடிக்குரேன் எனதுவல்லமையைபாரும் எதிர்த்துவாடா அடா சாளுவனே.

சாளுவன் சண்டை தரு.

வீரங்களேதுயெந்தன்னைவெல்ல வாருமிப்போது
சூரர்களாகியேதீரர்மனம்நடுங்க பாரும்உந்தனைபாரு
கூடராகப் போடுவேன் (வீ)

வீஷ்மாசாரி தரு.

சாளுவதீராஎந்தனை வெல்லமாளுமோபோடா
கோளரிபோல்வே மீள்கெற்சிதம்கொண்டு
தூளாகஉன்படை தும்சப்படஅடிப்பேன் (சா)

சாளுவன் தரு.

வெகுமன்னர்வாடஉந்தனுக்கஞ்சி செகமன்னரோட
தகுமோஉன்னுடைய தாஷ்டீகம்பாரடா
திகில்பட்டுநீயேங்கித் தேங்கஅடிக்குரேன் (வெ)

வீஷ்மாசாரி தரு.

வானவரஞ்சபயந்துந்தன் சேனையும்கெஞ்ச
நானேனமடிக்குரேன் நல்லதுநீவாடா
எனிந்தவல்லமை வீணாகப்பேசுராய் (வா)

சாளுவன் கந்தார்த்தம்.

அஞ்சாமல்வந்தெதிர்த்த கெங்கைமைந்தா
ஐம்பத்தாறுதேச மன்னவருக்குள்ளே
மிஞ்சுபயந்தோடுகின்ற மன்னர்போலும்
மெய்மனதில்யென்மனது கொள்ளவேண்டாம்
வஞ்சியர்கள்என்னை மெச்சிமாலை
சூட்டவானவரும்கண்டு புஷ்பமாரிப்பெய்ய.
பஞ்சாகஉன்படையை பரக்கடிப்பேன்.

ஷை தரு.

பாரடாநொந்தாய் நமன்சேரவேநொந்தாய்
(சுருள்) கூருகூருய்வாட்டிக் கொல்லுவேன்நொடிக்குள்ளே
கொடியபாணமும் நெடியிலேவியே
கடிகிஉன்னிடமுடியும் வீழ்ந்திட (பா)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

சற்றுமதியில்லாத பெருமையைக்கூறும்
சாளுவனேவாய்மதங்கள் பேசவேண்டாம்
வெற்றிபெரும் மன்னரெல்லாம்பயந்தே
ஓடிவிண்டலத்து தேவரெல்லாம்நடுங்கிவர
தத்தளித்துஉன்படைகள் முதுகிட்டோட
தனுகரத்திலேந்தி சிலபாணமீட்டி
சித்தமதுகொதித்துவந்தேன் நீயமிப்போ

ஷை தரு.

தேருவாயேயின்னமும் வீரங்கூருவாயோ
பாரும்பலமன்னர்கள் போர்முகமழிந்தோட
பத்திஉன்தலைதத்தி வீழ்ந்திட
மெத்தபாணமும் சுத்திவருகுது (தே)

சாளுவன் கந்தார்த்தம்.

என்னமோவீரியங்கள் பேசவந்தாய்
எங்கெங்கும்கீர்த்திபெற்ற மன்னனுனேன்
உன்னுடையவலுமைக்கு அஞ்சுவனோ
ஒருக்காலும் முதுகிட்டராசனல்ல
சின்னகுலமன்னருக்கு வீரமேது
சிலையெடுத்துபலவாளிஞன் தொடுத்து
மன்னவனேசின்னபின்ன மாகத்தெண்டால்.

ஷ தரு.

வாட்டுவேனே உங்களைக் குடியோட்டுவேனே
நீட்டியேகெதையை வீரங்காட்டியேஎகிரித்தாண்டி
நீண்டமணிமுடி பூண்டபணிகளும்
மீண்டுசிதறிடதாண்டி மோதுவேன் (வா)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

சாளுவனும்மிப்படிக்கி யுரைக்கும்போது
சரிசரியென்றேபொங்கி வீஷ்மாசாரி
கோளரிபோல் கொக்கரித்துவல்லுலக்கை
கொண்டுகரமண்டலமும் மதிரதாண்டி
வாளுடனே சித்திரவீரியனும்
கூடவையகத்துமன்னரெல்லாம் பிதிர்பட்டோட
தூளெழும்பவந்தமன்னர் படையைக்கூத்தில்.

ஷ தரு.

தூற்றினரே அரசர் வேண்டிபோற்றினரே
பார்த்ததேவரெல்லாம் சாத்துமலர்சொரிய
பாரிபேரிகை வீரமுரசுகள்
பூரிநமரிகள் மீரிபொங்கிட (தூ)

வீஷ்மாசாரி கவி.

சந்திரவடிவுசித்திரதம்பினி மகிழ்ந்துபாரும்
வந்திடும்போதுசத்தம் வரிசையும்மேளதாளம்
பந்தியாவந்தசேனை பரிகரிரதமிழந்து
அந்தந்தமன்னர்போதும் அதிசயமிருவாயே.

வசனம்.

கேளும் தம்பி சித்திரவீரியனே காசிராசன் குமாரத்தி இச்சிப் பாளென்று எண்ணினலும் உச்சிதமான ஆர்கேயூரகடககவுசகிரீட உபத்தனுப்பாணியாகவும் ரதகஜ துரகபதாதியோடும் முப்பத்தி ரண்டு மேளவாத்தியத்துடன் தாம் தாமென்று வந்து இரங்கின மகிழ்ச்சியினல் நம்மையிகழ்ந்தவுடனே அவாள் விருதுமுதலான சவரக்ஷணையுமழித்து பதாதியாக்கி முகம் இட்டவாக்காய் யோடும் படிசெய்த அதிசயத்தைபாரும் தம்பிசித்திரவீரியனே.

பொது வசனம்.

இவாள் இப்படிஇருக்க காசிராசன் சொல்லுகிறவிதங்காண்க.

காசிராஜன் தரு.

வந்தமன்னவற்குள்ளே இந்தஅரசரைப்போல்
மந்திரிஞன் கண்டதில்லையே எனதுநீதிமந்திரி
(சுருள்) எந்தந்தமன்னன்வந்த விதமெனக்கு
எப்படியவர்களை கொப்பன்போடவும்
இப்படிவெல்லவும் கைப்பலனுண்டோ (வ)

ஆனைக்கூட்டத்திலொரு சிங்கம்புகுந்ததுபோல்
அடித்திடகண்டேனே வந்தமன்னரை
(சுருள்) ஆனைசேனையும்வெகு மன்னர்சின்னப்பின்னங்களாக
சிந்தையும்வாடுதே மந்திரமாரே
வந்திடுமன்னர்கள் நொந்திடலாச்சே (வ)

ஆசைக்கொண்டுமேவந்த ராசர்கள்மடிக்கிட
அபகீர்த்திவந்ததையோ நானென்னசெய்வேன் (அ)
(சுருள்) தேசமன்னவருக்குள்ளே யேசலாமேயிகழ்ந்து
தீரரைப்போல்வா வீரவாகைக்காணேன்
பாரிலழகுடைய மாரனுமாமே (வ)

வீரியர்மெச்சி வெகுமதிதந்திட
விண்ணவர்தன்னலாகுமோ மந்திரிமாரே (வி)
(சுருள்) மாராவலுமையுள்ளோர் வந்தார்மகளைஞடி
மங்களமாகவே சங்கையிலாமலே
நங்கையர்மூவரை பொங்கமாய்தருவேன் (வ)

காசிராஜன் கவி

அருமையுள்ளமந்திரியே வீஷ்மாசாரி
அவர்தம்பிசித்திரவீரியருங் கூடிதானெல்லாம்
நெரிங்கிவந்தமன்னர் சேனை தன்னைவென்ற
வல்லமைக்கு யான்மெச்சி
பரிவாகவெகுமதிகள் செய்யவேண்டி
பாவையர்கள்மூவரையும் ரதத்திலேத்தி
திரமுடையமன்னவர்கள் சூழ்ந்துநிற்க
சிங்காரமாய் கொண்டுவருகுவீரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே அஸ்திஞபுரிவேந்தனுகிய வீஷ்மாசாரியும் அவர்தம்பியாகிய சித்திரவீரியரு மீர அனேகபலசாலி

கள் தாணிநெரிங்கி வந்துநின்ற மீதில் எதிர்த்து நிமைப்பொழுதில் சண்டமாருதவாயிலகப்பட்ட இலவம்பஞ்சாய் பரக்கடித்தவல்லமைக்கு நான்வெகுமதிசெய்யக்கோறுகிறேன் ஆகையால் அவர்கள்நாடிவந்த என்குமாரத்தி மூவரையும் வெகுமதியாகக் கொடுக்கமனதாகினேன் நீங்கள் அந்தமூவரையும் ஒருரதத்திலேற்றி இந்தசபைக்கு கொண்டுவாருங்கள் எனதுமந்திரிமார்களே.

பொது வசனம்.

அப்போதுபெண்கள் மூவரையும் ரதத்திலேற்றி சபைக்குகொண்டுவருவது,

அம்பை யம்பிகை யம்பாலிகை தரு.

சித்திரரதமேறி உத்தமிமாதர்கள்
சேயிழைமார் சூழவேவெகு
பத்தியதாகவே மெத்தமகிழ்ச்சியாய்
பைங்கிளி மாதர்வந்தார்
நாதக்கீதம் பாடவேத
முழங்கிட நாட்டியமாடிடவே
நாதக்கீதம்பாட வேதமுழங்கிட
நாட்டிய மாடிடவே
இந்தபூதல மன்னறும்தாதை
மகிழ்ந்திடபூங்கிளி மாதர்வந்தார்
அன்னநடைமாது அம்பையம்பாளுடன்
யம்பிகை மூவருமேநல்ல
உன்னிதமாகவே மின்னி
சொலித்திட உத்தமிமாதர்வந்தார்
பாலசமுத்திர சந்திரரென்னவே
பாருலகோற் துதிக்கநல்ல
காலைசூரியன்போல் விளங்கிய
கன்னியர் மூவர்வந்தார் (௪)

காசிராஜன் கவி.

சந்தனராசன்பெற்ற சமர்த்துள்ள அரசேகேளாய்
வந்தமன்னவரைவென்றவல்லமை தனக்குமெச்சி
அந்தமாம்பெண்கள்மூவர் ஆடையாபரணமெல்லாப்
விந்தையாயுங்களுக்கு வெகுமதிதந்திட்டேனே.

வசனம்.

கேளுமப்பா வீஷ்மாசாரியரே இலக்கமில்லாத சேனைசூழ்வந்த இராசாதிபதிகளை நிமைப்பொழுதிலேவென்ற உங்கள்வல்லமைக்கு மெச்சியென்குமாரத்திகள் மூவரும் யாடையாபரணம் நால்வகை சேனையும் உமக்குவெகுமதி யாகத்தந்தேன் கைக்கொண்டு சந்தோஷமாக விவாகம்செய்துக் கொள்ளுங்கள் பாலர்களே.

வீஷ்மாசாரி கவி

கனகவேயன்புவைத்த காசிபூபதியேபோற்றி
எனக்கேதுபெண்களிச்சை ராஜ்ஜியம்வேண்டேன் தம்பி
தனக்காகவொருபெண்ணுக்கு சந்தோஷமாகவந்தேன்
மனக்கேடுவந்திடாமல் மங்கையொன்றளித்திடாயே

வசனம்

கேளும் காசிமகாராசனே நமக்கோ ராஜ்ஜியபாரமும் வேண்டேன், ஸ்திரீகள் விருப்பமும் வேண்டோமென்று வீஷ் மிச்சுக் கொள்ள தேவர்கள் எல்லாம் எனக்கு வீஷ்மாசாரியரென்றுநாமதேயம் கொடுத்தார் இப்பவும் நான் வந்தபோதே என் தம்பி சித்திர வீரியனுக்கு ஒரு பெண்வேண்டி வந்தேன் நீர் மகிழ்ந்து மனதுக்கின்பமான பெண்ணைத்தந்து இரண்டு பெண்களை நிறுத்திக்கொள்ளும் மகாராஜனே

காசிராஜன் கவி

வடமேருநிலைசாய்ந்தாலும் மதிர்கதிர்தெற்கெழுந்தும்
கடலதுவற்றினாலும் கையினாலொன்றைத்தந்து
விடவோநினைப்பதுண்டோ மெல்லியருடனேயேகி
கடுகியேமனதுக்கேற்ற கலியாணம்நடத்துவீரே,

வசனம்

மேலும் வீஷ்மரே யிமையகிரி பர்வதமானது நிலைசாய்ந்தாலும் சந்திர சூரியர் தெற்கெழுந்தாலும் சப்த சாகரம் வற்றினாலும் நான் ஒருவருக்கு என்மன சந்தோஷமாக தந்தப் பொருளை திரும்பவும் யிச்சிப்பதில்லை நீர் இந்த மூவரையும் அழைத்துகொண்டு போய் உமதுமனதுக் கிச்சையானபடி நடவுமப்பா வீஷ்மாசாரியே,

வீஷ்மாசாரி தரு

சந்தோஷமதாகவே ரதம்விடுவேன்
இந்ததாரணிமன்னவர் பார்த்துமேமெச்சிட
கந்தருங்குழலிமாதர் மாதவர்பிதாமன்னர்
மாசிமகாராஜருக்கு பாக்ஷதமுடன்போற்றியான்
அன்பாகவிடைகொடுத்தார் காசி
அன்னகர்வீதிவிட்டதுங் கடந்தேன்
தென்பானமன்னறெல்லாம் இந்த
தேசமெங்குஞ்ஜெயபேரி போட
ஆனைபரிசேனைபரி ரதங்களுஞ்சூழ
நலமாக-அந்தந்ததேசமன்னர் வந்துமுடிதாழ
மேனகைரம்பைஇம் மாதர்களெல்லா
மிங்கிர்சங்கீர்தம்பாடி வேணநொடிப்புகளொடித்து
வேடிக்கையாகவே தாங்களாட
வீரிடவேயானைகளு மீரிடவேபேரி
நாடிவரதன்நகரம்நோக்கிவந்த நங்கையான அம்பை
மனசங்கையுரைப்பாள் தத்தோம்தனத்த தனனதன்ன.

அம்பை கவி.

சத்தியம்தவரிடாத சந்தனராசன்பெற்ற
வெத்திசேர்மன்னஉந்தன் மெல்லடியடியாள்போற்றி
வித்தையப்பியாசம் அன்னள்வினவியசாளுவற்கு
உத்தமிநானேயென்று உரைத்தனனனுப்புவீரே.

வசனம்.

சரணம் சரணம் காங்கேய மகாராசனே அடியேன் ஒருவிண்ணப்பஞ் செய்குரேன் அதாவதுநான் இளமைபருவத்தில் கல்விசாலையில் வாசிக்கும்போது சாளுவதேசாதிபதியான சாளுவமகாராசனுக்கு நானேபாரியாளென்று உருதிவசனம் சொல்லிஇருக்குரேன் ஆனதினல் அந்தவாக்குதப்பாமல் சாளுவதேசம்சென்று அவரை மணம்புரிவேன் கிருபைசெய்து ரெக்ஷிக்கவேண்டுமையாசுவாமி.

வீஷ்மாசாரி கவி.

அன்னமேதேனேமானே அம்மையேசொல்லக்கேளாய்
இன்னிலம்தன்னிலுள்ள யெந்தசாதியரானலும்

சொன்னசொல்பிசகொண்ணாது சுருக்காகரதத்தைவிட்டு
கன்னியேயிறக்கிவிட்டேன் கடுகேனேயேகுவாயே.

வசனம்.

வாரும்பெண்ணே அம்பையே உலகத்திலே எந்தசாதியாகிலும் வார்த்தை தப்பினவர் தாழ்ந்த ஜாதியாரென்றும் வார்த்தைதப்பாதவர் மேலானசாதியாரென்றும் வேதமுறையிடுவது அதிலுமோ வார்த்தைதப்பும்படி செய்யப்பட்டவனோ கீழ்குலத்தா ரென்றெண்ணப்படு மாகையால் சந்தோஷமாக ரதத்தைவிட்டு தாழஇரக்கி விட்டேன் உடனே அனேககாவலாளிகளும் கூட்டினேன் சந்தோஷமாகப்போய் வாரும் அம்பையே.

அம்பை தரு.

தங்கைஅம்பாலிகை யேனும்
சாளுவபூபதி தன்னோடி
மங்களமாகவேயெங்கும் புகழ்ந்திட
மகிக்ஷியாய் போய்வாரேன் (த)

அம்பிகை அம்பாலிகை தரு.

சிங்காரதமைக்கையாரே உந்தன்சீர்பாதம்போற்றி
பெண்கள்சிகாமணிமூவருமேவந்து பிரியவிதிவசமோ (சி)

அம்பை தரு

வாதைப்படலாமோதங்கா மகிழ்ந்தென்னையனுப்பும்
சோதிமுடிமன்னன் சாளுவற்கே
எனென்றுசொன்னேனொரு வசனம்(வா)

அம்பிகை அம்பாலிகை தரு

எதுசெய்குவோமம்மா இனி
யுன்னை யெப்படிப்பிரிந்திருப்போம்
ஆதிசிவன்செயலிதுவோ அறிகிலோம்
எங்களாசைபோக்கடி அங்கம்நடுங்குதையோ(எது)

அம்பை தரு.

சி னகணமணியே தங்காசிந்தைகலங்கவும்
மாருமுடிமன்னன்சாளுவனைக்காண மகிழ்ச்சியாய்போய்வாரேன்

அம்பிகை அம்பாலிகை தரு.

பாரரசீயெங்கள்முகம் வயர்பற்றுதே நீபிரிய
வாராய்தமக்கையேஉன்னையனுப்பி மனதெப்படிதுணிவோம்(பா)

அம்பை தரு.

இந்ததுயர்வேண்டாம்அம்மா என்னிடதங்கையரே
கந்தமலர்சூடும்சாளுவரைகாண கடிகிவிடைதாராய் (இந்)

அம்பை அம்பாலிகை தரு.

வந்துபிரந்தோமே அம்மா யிம்மட்டில்பிரிந்தோமே
சந்தேகமாகுதேஎ கள் மனதுதையலேயென்னசெய்வோம்(வ)

அம்பிகை கந்தார்த்தம்.

தங்கையேஒருமொழி சொல்வேன்சேளும்
சாளுவ பூபதியும்யானுமாக
இங்காரமாகவே கல்விகற்றிடும்போது
தீரனுமென்தனை சேரவேவினவ
சங்கையில்லாமலே உன்பாரிஞனென்று
சத்தியம்செய்து கைத்தந்துவந்தேன்
மங்களமாகவே சொன்னசொற்பிசகாமல்

ஷ தரு.

வாரும்தங்கைமார்களே போய்வாவென்று
கூறும்நன்மைகள் நீங்களே
பாரும்புகழ்வந்தசீரும் பெருகும்செல்வம்
மாறுவடிவழகிதாரும் விடைஎனக்கு (வா)

அம்பிகை அம்பாலிகை கந்தார்த்தம்.

அய்யய்யோஎன்னசெய்வோம் என்னிடதமக்கையே
அயன்விதிஒருக்காலும் பிசகிடாது
வையகம்புகழும்காகி மன்னவன்
வயற்றில்வந்துமூவரும் ஜெனனமாகி
நய்யாமல்இதுகாலம் வெய்யவன்போலோங்கி
ஒருநாளும்பிரிந்து நாமிருந்ததில்லை
தெய்வத்தின்செய்கைபே செய்தவக்குரையிதோ.

ஷ தரு.

தியங்கலானே ணம்மணி
உனைப்பிரிந்து ஏங்கலாணேணம்மணி

பூங்கிளியானமாதே யேங்கவிதிவசமோ
தாங்காதுயெங்கள்மனம் நீங்கிநீங்கியேகிட (தே)

பொதுக் கவி.

அம்பையுந்தங்கைமார்கள் அனுமதிபெற்றுக்கொண்டு
சம்பரமாமனங்களித்து சாளுவதேசம்போக
தெம்பாகவீஷ்மாசாரி தேர்பரிநடத்தப்போன
தம்பிதன்முகத்தைநோக்கி சந்தோஷமுறைக்கின்ருரே.

வீஷ்மாசாரி தரு.

தம்பிசித்திரவீரியனே ஒருசங்கதி
சொல்லுரேன் கேளுமிப்போ

சித்திரவீரியன் தரு.

உம்பர்புகழ்பெருகும் அண்ணா
உசிதமாய் திருவுளம்பத்துமிப்போ

வீஷ்மாசாரி தரு.

அம்பையும் போனபின்புதம்பி
ஆனந்தசந்தோஷ மானேனப்பா

சித்திரவீரியன் தரு.

இன்பமெனக் கில்லையோபோன்ற
யேந்திழைமீதிலே யென்தமையா

வீஷ்மாசாரி தரு.

பரியைநடத்து ம்பபாபாகா
இந்தபாவைக்கு மணமின்றுசெய்திடவே

சித்திரவீரியன் தரு.

அரியஉரைசெய்யு மண்ணயிப்போ
அவசரப்படுவது யேதறியேன்

வீஷ்மாசாரி தரு.

அந்தசாளுவனிடம போனஅம்பை
திரும்பியே வந்திவோள்

சித்திரவீரியன் தரு.

எந்தவிதமாக அண்ணா
ஏந்திழைவரும விதமறியேன்.

வீஷ்மாசாரி கவி.

நலமரியாசித்திரவீரியனே கேளாய்
நாமேகிமன்னவரை பாக்கடித்து
உலகரியபெண்களையும் ரதத்திலேற்றி
உச்சிதமாய்வரும்வழியில் அனுப்பிவிட்டோம்
இலகுமுடிசாளுவனும் விருப்பமாகி
எப்படிக்கிமணம்செய்வான் செய்வதேது
பலரறியஇங்குவரப் போராளப்பா
பாவைவருமுன்னே மணஞ்செய்குவேனே.

வசனம்.

வாரும்தம்பி சித்திரவீரியனே நாம் காசிதேசமேகி பெண்களை யிச்சித்து சர்வதேச மன்னரெல்லாம் அதாகெதியாகப் பாக்கடித்து அந்தபெண்கள் மூவரையும் ரதத்திலேத்தி வரும்வழியில் மூத்த வளை விட்டோம் அவள் சாளுவராசனிடம்போய் இருக்கிறுள் அவளை அந்தசாளுவராசன் விவாகம்செய்யாமல் அடித்தோட்டப் போகிறுன் அவள் இங்கேவருவாள் பாருங்கள் அதற்குமுன்னமே விவாகத்தை நிரவேற்றவேண்டியது தம்பி சித்திரவீரியனே.

பொது வசனம்.

இப்படியிருக்க அம்பைசாளுவராசனிடம் போகிரவிதம் எப் படியென்ருல்.

அம்பை கவி.

அவர்முகம்வீஷ்மரிடம் அனுமதிபெற்றுக்கொண்டு
நலமுள்ளசேனைசூழ நங்கையர்கவரிவீச
மலர்முகவதனமின்னமங்கையும்சிவிக்கையேரி
சலுதியாயம்பைமாது சாளுவனிடம்வாராள்

அம்பை தரு.

சந்திரவதனமுள்ள தாதியர்கள்புடைசூழ
அந்தரத்தொனிமுழங்க அம்பையும்வந்தாள்
கந்தமும்கமகமென்ன கலைகள்பளபளென்ன
சுந்தரவதனமுள்ள தோகையும்வந்தாள்
பாராளும்காசிராசன் டண்ணியதபத்தால்வந்த
சீருனசெல்வியம்பை தேவியும்வந்தாள்

மாரூமுரசுபேரி மல்லரிசல்லரிப்பாட
போராலுயர்ந்தஅம்பை பேதையும்வந்தாள்
தண்டைகொலுசுகொஞ்ச தங்கப்பணிகுலுங்க
மண்டலம்துதிக்கும் அம்பைமாதிதோவந்தாள்
கண்டமன்னர்மயங்க காமரதியாளென்ன
எண்டிசைமதிக்குமாது யேந்திழைவந்தாள்
தங்கமுடிசாளுவற்கு தந்தசொல்பிசகிடாமல்
மங்களவதனியம்பை மாதிதோவந்தாள்
செங்கைகடகமின்ன சேல்விழிக்குமையெழுதி
பொங்கமாய்சாளுவனிடம் பூவையும்வந்தாள்

அம்பை கந்தார்த்தம்.

மண்டலம்போற்றுகின்ற மன்னற்குமன்னப்போற்றி
சண்டப்பிரசண்டனன சாளுவபதியேபோற்றி
அண்டினேன்உந்தன்பாதம் அடியவள்தன்னைக்காக்க
பண்டுசொற் பிசகாபாவை.

ஷை தரு.

பாதவந்தனம வந்தனம்
ஆ பிராணநாதா பாதவந்தனம்
பாதபந்தனம் நாதனே
நவநீதனேயென்னை யாதரித்திடும் (பா)

சாளுவன் கந்தார்த்தம்.

வந்தனம்செய்துநின்ற மங்கையேவாழிவாழி
உந்தனைக்காசிமன்னன் ஒருவருக்கீய்ந்ததென்ன
அந்ததோர்மன்னன் உன்னை அகத்தியவிட்டதென்ன
எந்தனை நாடிவந்த

ஷை தரு.

என்னகாரியம்சொல்லுவாய் அம்பையேவந்தஎன்னகாரியம்
என்னையேநாடியே கன்னியேநீர்வந்து
உன்னிதசேதியைப் பன்னியேகூறும் (எ)

அம்பை கவி.

சங்கதிசொல்வேன்கேளும் சாளுவமன்னப்போற்றி
எங்களைகாசிமன்னன் யீந்திடவீஷ்மருக்கு

மங்களமாகப்போகும் வழியிலுந்தனுக்குமுந்தி
செங்கைநான்தந்தேனென்ன சீர்பெறஅனுப்பினாரே

வசனம்.

கேளும் சாளுவபூபதியே எனதுதந்தையான காசிமகாராசன் வீஷ்மாசாரியருக்கு மெச்சி யெங்கள் மூவரையும் காணிக்கையாகத் தந்தார் அவர் மகிழ்ந்து போகிற நடுவழியில் நீரும் நாமும் பள்ளிக்கூடத்தில் நீரெனக்கு புருஷர் என்றும் நானே உமக்குப் பாரியாளென்றும் கைதந்தசங்கதியைச்சொல்லி கடவாமல் நடக்கவேணுமென்று அவரிடத்திலேவிடை அந்தவாக்குபெற்றுவந்தேன் என்னை மகிழ்ந்து சந்தோஷமாய் விவாகம் செய்துக்கொள்ளும் சாளுவதேசாதிபதியே.

சாளுவன் தற்கம் தரு.

என்னமொழிசொன்னாயடி யிளமாமதியாளே
உன்னை ஒருமன்னன்கொண்டு உச்சிதமாய்போக
உந்தனைவிட்டிட எந்தனைதேடியே.
வந்திடநன்மையோ சந்திரரூபியே. (எ)

அம்பை தரு.

மாருபதிதீராசுவாமி வனனவடிவழகா
பேராலுயர்வீரா மூந்திபேசும்விழிகூசி
போதகமெண்ணிட பாதகமென்றுமே
வதையகத்திடமாதுமே வந்தேன் (ம)

சாளுவன் தரு.

இராஜனெடுதேசமன்னன் நாடிஉன்னைத்தேடி
தேசமெங்குமரிய அவன்தேரிலேரிமீர
தெள்ளியேமன்னவ ருள்ளவர்காண
கள்ளமில்லாமலே கொள்ளுவதெப்படி (இ)

அம்பை தரு.

முந்திமொழிதந்தாயிப்போ மோசம்செய்யவேண்டாம்
வந்தேன்மொழிதந்தேனென்று வாரும்கிருபைபாரும்
வர்மம்நீவைத்திட தர்மம்நீயல்ல
நின்மலருக்கிது செம்மையாதாமோ (மு)

சாளுவராஜன் கவி.

அலைகடல் சூழுலகில் மிக்கற்றமுள்ள
அம்பையே யுந்தனுக்கு என்னபுத்தி சொல்வேன்

உலகிரியஉன்தந்தை மூன்றுபெண்ணை
ஒருவருக்கு யீந்திருக்க நீயும்தப்பி
வலியவந்து என்னைநீமனமுஞ் செய்ய
வாடினாலுந்தனையுங் கொள்வதற்குப்
பலமன்னர்இகழுவதும் நீயுமிப்போ
பலசாலிவீஷமரிடம் சேறுவாயே

வசனம்.

வாரும்பெண்ணே அம்பையே உனது தந்தையானவர் உங்கள் மூவரையும் ஒருவருக்கு மகிழ்ந்தளிக்க அவன் கொண்டுபோகும் போது நீ அவனைதப்பி. என்னிடம்வந்து மணம்புரிய வலுவுசெய்கிருய், உன்னை நான்மண செய்தால் சரியொற்றாசாதி பதிகள் இகழ்ச்சிசெய்யவரும் நீ-சந்தோஷமாய் வீஷ்மாசாரியிடம் போய்சேறும் அம்பையே.

அம்பை தர்க்கம்-தரு.

எந்தனுளும்உந்தனைநான் யெண்ணியெண்ணிமன்ன
விந்தமதன்கணையாலே னெந்துவந்தனே
சந்தேகநீயெண்ணவேண்டாம் சாளுவமன்ன
முந்திமொழிநிந்தை செய்யதமாமல்லவே (எ)

சாளுவன் தரு.

அல்லவென்றுசொல்லவந்த அம்பைநாயகி ஒரு
அரசருக்குவரிசையாக அளித்தார்தந்தையும்
மெல்லியைஅவனைவிட்டு வீணனக்காரிவந்து
வேடிக்கைநீபேசவந்தாய் தேடியெந்தனே (அ)

அம்பை தரு.

தேடிவந்தேன்சொற்படிக்கு மோடிசெய்யாதேமன்ன
தேசத்தோர்அரியஉன்னே ஆசைக்கொண்டேன்
வாடினப்போதுந்தனுக்கு வார்த்தைசொன்னனேமன்ன
வஞ்சகம்தகாதென்று நான்கெஞ்சிவந்தேன் (தே)

சாளுவன் தரு.

கொஞ்சினுலும்சஞ்சலங்கள் நீங்குவதேதுபெண்ணே
கீர்த்தியுள்ளமன்னருக்கு யேற்குமோபோம்போம்
வஞ்சியேஉணக்குசொன்ன வார்த்தைஉண்மையேபெண்ணே
வந்தொருவன்கொண்டுபோக சிந்தைக்கேற்குமோ (கொ)

அம்பை தரு.

தேருவதென்றைக்குமனம் வீரசூரனேமன்னா
சித்தம்வாடனுனுமென்ன குற்றம்செய்தேனோ
உந்தனையேநானும்நினைந்து மையலானனேமன்னா
வாருமணம்செய்து இன்பம் தாரும்வீரனே (தே)

சாளுவன் தரு.

வீரசூரனென்னைபங்கம் சூரனேறுமேபெண்ணே
விட்டுவிடும்இந்தவார்த்தை கட்டழகியே
காரிமரியவீஷ்மாசாரியை விட்டுபெண்ணே
கண்டுஇன்பம்பேசவந்தாய் நன்றல்லப்போம்போம் (வீ)

அம்பை தரு.

போமென்றுசொல்லும்வார்த்தைபுண்ணியமாமோமன்னா
புத்தியில்லாமதாசை நத்திவந்தனே
ஆமோனுனும்வந்தஉண்மை யரிந்திடாமலேமன்னா
ஆசையைவெருத்துப் பேசமோசமல்லவே (போ)

சாளுவன் தரு.

மோசம்செய்யயில்லே உன்னைராசக்கன்னியேபெண்ணே
முந்தியிந்தபுத்தியில்லா வந்ததேதுக்கு
தேசமன்னர்நகைப்பாரே நேசம்செய்திடபெண்ணே
தீண்டேனுன்னையிந்தவாது வேண்டாம்நீபோம்போம்(மோ)

அம்பை கவி.

தந்தைதாய்தனையிழந்து சந்தனன்சுதனைவிட்டு
வந்துனன் உமக்குசொன்ன வாக்கதுதவரிடாமல்
எந்தனையகத்திவிட்டால் யினியில்லாபாவம்நேறும்
சிந்தையிலன்புவைத்து சீர்மணம்புரிகுவாயே.

வசனம்.

கேளும்மகாராசனே என்தாய்தந்தை பந்துக்களையிழந்துஎன்னைகோரிவந்தவீஷ்மாசாரி அன்பையும் வெறுத்து எதுக்காகவந்தேனென்றால் ஆதியில் உமக்குபாரியா ளாகிறேனென்று சொன்னவாக்கியம் தப்பலாகாதென்று உன்னை உண்மையாகவே யோசித்து வந்ததைபாராமல் வெருத்துவிட்டால் பெண்பாவம் வந்துசம்பவிக்கும் தேவரீர்மணம்வைத்து என்னைமனம்புரியும் மகாராசனே.

சாளுவன் தரு தர்க்கம்

உன்னைமணம்புரிவேனே வந்துவசனிப்பதேனே
மன்னரெல்லாம்வந்து என்னையிகழ்ந்திட
வருமோயதிகதுன்பம் தருமோஉன்மீதின்பம் (உ)

அம்பை தரு.

இந்தமோசம் செய்யலாகுமோமன்னா
எளிதல்ல பெண்பாவம்போகுமோ
உந்தனைநம்பியே வந்தேனேஅய்யோ
உதவிசெய்யவேணும் பதறுதேயென்னெஞ்சம் (இ)

சாளுவன் தரு.

வாதுசெய்ய வேண்டாம்போடி
மன்னவன் வீஷ்மனைதேடி
மாதேசபைக்குள்ளே மாலைநீசூட்டாமல்
பேதகமெண்ணிய சூதுக்காரிபோடி (வா)

அம்பை தரு.

ஐயோயிதனியாயம் உமக்கார்சொல்லுவாரினிஞாயம்
வையகமன்னர்நொய்ய வசனம்சொல்ல
வந்திடுமோ மன்னாயெந்த
தப்பிதம் செய்தேன் (அ)

சாளுவன் கந்தார்த்தம்.

மெத்தமெத்த வாதாடும்மோசக்காரி
வில்வேந்தர்வந்துமுந்தன் வேழ்விக்காக்க
பத்தியுடன்நீயெனக்கு மாலைசூட்ட
பார்மன்னர்அரியமணம் புரிவேனல்லால்
சத்தியொருமன்னவனே நீயுமேகி
நடுவழியில்வந்ததென்ன யென்முன்வந்து
குற்றமில்லாமங்கையைப்போல் பேசவந்தாய்.

தரு.

கூரடிநீகூரவும் வந்தவளாரடி
வீரசூரபல ராசர்கள்மெச்சியே
தீரனெனக்கு நீதாரமோடி (கூ

அம்பை கந்தார்த்தம்.

தாரணியில்மன்னருக்கு மன்னனென்றும்
சவுரியத்தில்கீர்த்தி பெற்றோனென்றும்

பூரண்சம்பத்துடைய புனிதனென்றும்
புரவலற்குநன்னீதி யுடையோனென்றும்
காரணகாரியமரிந்த கர்த்தனென்றும்
கவலைகொண்டு நான்வந்ததில்லையில்லை
வாரணத்து முன்வந்து அரிவதாக

ஷை தரு.

வந்தனேஒருவார்த்தைக் கிதங்கியேநொந்தனே
வந்திடும்உண்மையை மனதிலரிந்துமே
எந்தனைசேர யின்பமகத்துவம்
வந்திடும்உண்மையை மனதிலரிந்துமே
எந்தனைசேர யின்பமகத்துவம் (வந்)

சாளுவன் கந்தார்த்தம்

எத்தனைநீசொன்னலும் பெண்ணேயெந்தன்
இருதயமும்மிதங்குவது ஒருக்காலுண்டோ
சத்தியத்தைநீயகத்தி ஒருவருக்கு
தாரமென்னபாரிலுள்ளோர் அரிவதாக
நத்தியொருமன்னனிடம் போனபின்பு
நடுவழியில்நீவந்து நம்மைக்கண்டு
கற்றிக்கற்றிபேசவந்தாய் யுனைப்போலெங்கும்

ஷை தரு

காணனேயுந்தனை மணம்பூணனே
காணவேஇச்சபை விட்டுமேயெங்கிடு
நாணமில்லாமலே சொல்வதைவிட்டு (கா)

அம்பைகந்தார்த்தம்

பெண்ணென்ருல் பேயுமனமிறங்குமென்றே
பெருங்கில்வாக்கியமும் அரிந்திடாதோ
வண்ணமுள்ளமன்னவனே யுமக்குச்சொன்னேன்
வாக்கியத்தால்வந்து மதகெட்டேனிப்போ
எண்ணமினிவைத்துமென்ன உந்தன்மீதில்
இனிதிரும்பிவீஷ்மரிடம் போகலாமோ
நன்ருகவாழுமினி நான்திரும்பி

ஷை தரு

நாடுமோநானுன்னிடம் வந்திடக்கூடுமோ
நாடிநாடியே யோடிகலங்கியே
வாடிதவித்திட வந்துதேவிதிகள் (நா)

பொது விருத்தம்

இப்படிமன்னன்சொல்ல இடிகேட்டநாகம்போலே
தப்பிதம்வந்துதென்த தரைதனில்அடித்துமோதி
எப்படியென்றுயேங்கியீன்ற தந்தையைநாடி
தப்பிதமானமாது துடித்துமேவருகின்றுளே

அம்பை தரு

வாக்குதவரிடாமல்வந்து மதிகுலேந்தேன்மகாதேவா
என்னசெய்வேன் தெய்வமே
பாக்கியமிழந்துயான் பரதவிக்கலானேன்
தந்தைமகிழ்ந்தளித்த விந்தைமன்னனைவிட்டு
தனியாகிநின்றேனேயோ தெய்வமே
எந்தவிதமாக தந்தையிடம்சேறுவேன்
இனியென்னசெய்வேனய்யோ தெய்வமே
சாளுவமகாபாவி தந்தைமொழிக்கேளாமல்
தள்ளிவிட்டாரே அய்யோதெய்வமே
கேளாசெவிக்கியின்பம் மீளாநெருப்பெனவே
கீர்த்திவிஞ்சுசுதையோ தெய்வமே
யாரைசதமென்றெண்ணி அண்டிக்குறைதீருவேன்
அய்யோநானென்னசெய்வேன் தெய்வமே
வாருதபெருந்துயர் வந்துதேயென்செய்வேன்
மகபாவியானேனேயோ தெய்வமே

அம்பை கவி

தந்தையேபாதம்போற்றி தப்பிதம்யானும்செய்த
நிந்தையைப்பொருத்துக்காக்க நின்பதம்போற்றிஐயா
எந்தனைவீஷ்மருக்கு யீந்திடசாள்வற்கு
தந்ததும்போனசேதி சாத்துவேன்யரிகுவீரே

வசனம்

சரணம் சரணம் தந்தையே நான்செய்தபெரும்பிழையை பொருத்து தாங்களென்னை வீஷ்மாசாரிக்கு காணிக்கையாக கொடுத்தபிரகு நான் கல்விசாலையில் வாசிக்கும்போது நான் சாளுவ ராசனுக்கு யான் பாரியாளென்று வாக்குதத்தம் செய்தேனென்று வீஷ்மாசாரியிடம் விடைபெற்றுபோன சேதியை சொல்லுகிரேன் கேளும் தந்தையே

காசிராஜன் வசனம்

அப்படியே சொல்லிவாரும் அம்பையே

அம்பை தரு

அய்யாஞன்பெண்பிரந்துவந்த அவதியைசொல்வேன்கேளுமிப்போ
பொய்யாதவீஷ்மருக்குயென்னை பொங்கமாய்ரதமேற்றிவந்தபின்பு
நாடுநகர்விட்டுபோகும் நடுவழிதன்னில்நான்வணங்கி
தாண்டாண்மைசாளுவற்குமுந்தி தாரமென்றுவாக்குசொன்னேன்
அப்போதுகாங்கையறுமென்னை அனுப்பியவருமேகிடவே
தப்பாமொழிப்படிக்கியானும் சாளுவமன்னனைகண்டுசெல்ல
மன்னன்தனக்கீந்தஉன்னை மணமாலையான்சூடுவதில்லைஎன்று
என்னையனுப்பிவிடவந்தேன் என்தலைவிதியோதந்தையரே

ஷை கவி

வரிசிலையேந்துங்காசி மன்னனேஎனையளித்த
பரிவானஅய்யாமுந்தி பள்ளியிலிருக்கும்போது
சரியானசாளுவற்கு தாரஞன்ஆவேனென்று
நெறிமுரைபிசகிடாமல் நேசிக்கஅகத்தவந்தேன்

வசனம்

கேளும் என்னை யீன்றெடுத்த பிதாவே நான் பள்ளியில் வாசிக்கும்போது என்னை இச்சித்த சாளுவமகாராசனுக்கு நான் பாரியாகிறேனென்று வாக்கு தந்தேன் அந்தவாக்கியம் பிசகலாகாதென்று வீஷ்மாசாரிக்கு தெரிவித்து நான் சாளுவரிடம்போக அவர் கோபித்து ஒருவன் கொண்டுபோன உன்னை மாலைசூட்டுவதில்லை என்று யிகழ்ந்துவிட வந்தேனையா தந்தையே

காசிராஜன் புலம்பல் தரு

அய்யோமகளேஎன்னசெய்வே னையோஉன்தலைவிதியிதோ
வையகமரியஒருவர்க்கீய்ந்திட ஓ-ஐயோமகளே
வார்த்தைக்கு அபகீர்த்தியாச்சுதே
உரிமையாகசாளுவற்குரைத்தாயோ ஓ-ஐயோமகளே
உண்மையெனக்கு நன்மைசொல்லாமல்
பிரியமாகஒருவற்கீய்ந்தபின்பு ஓ-ஐயோமகளே
பேசஉனக்கு மோசம்வந்ததே
அனுப்பஉந்தனைவீஷ்மாசாரியும் ஓ-ஐயோமகளே
ஆதரிப்பாரோ யேதுசெய்குவேன்
உன்னைப்பழுதாயுலகம்சொல்லுமே ஓ-ஐயோமகளே

யுனக்குதவியில்லையென்று எந்தன்சித்தம்வாடுதே
செல்வமாகவளர்த்துவந்தேன் ஓ-ஐயோமகளே
சிந்தைவாடவுமுன் தலைவிதியோ
அல்லலாகிநீயும்வாட ஓ-ஐயோமகளே
ஆதரவினி யேதுசெய்வேன்

காசிராஜன் கவி

மாதாவேசாளுவற்கு சொன்னவார்த்தை
வந்தெனக்குசொல்லாமல் மறைக்கநீயும்
பிதாநானுந்தனுக்கு சுயவரந்நாட்ட
பேசுமொழிப்படிமாலை சூட்டிடாமல்
வாதாடமெச்சியொரு மன்னர்க்கீய்ந்த
மன்னவனேவெருக்க விதிவசமோ அய்யோ
யேதேதோசிவன்செயலை வெல்வாறுண்டோ
இப்போதேதூதுவரை வருவிப்பீரே

வசனம்.

கேளுமம்மா தாயே நீ சாளுவமகாராஜனுக்கு சொன்ன உறுதியை எனக்குச்சொல்லாமல் போய்விட்டாய் அதுவுமல்லாமல் மானுனக்குச் சுயவரஞ்சாட்டும்போது அந்த அரசனுக்குமாலைசூட்டாமலிருந்தாயே அப்படியிருந்தபோதிலும் நான்காணிக்கைதந்த அரசனன்பினலே முழுதும்போகாமல் தடுத்து புருஷனில்லாமல் தவிக்க உன்தலைவிதியோ ஆகிலும் அந்தவீஷ்மாசாரியர் யனமரியவேண்டி நமதுதூதுவர்களை அழைப்பியும் மந்திரிகளே.

மந்திரி வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

தூதுவர் கவி.

சிரசினிற்கைப்பூண்டு சித்திரப்பணிகள்மின்ன
வரிசையாடாலிக் கட்டிவரிந்துமேயிருக்கிகச்சை
கரமதில்வெள்ளிசோட்டா கத்திகேடையமிலங்க
துரைகளுக்கின்பமுள்ள தூதுவர்வருகின்றாரே.

தூதுவர் தரு.

தூதர்வந்தாரேசபைக்கு தூதர்வந்தாரே
பூதலமெச்சிட தீதிலாமன்னவன்
போத மகிழ்ந்திட (தூ)

சரிகைபாகையும் சிரசிலிலங்கிட
சந்திரஆரங்கள் மின்னிக்குலுங்கிட
வரிசையாகவே மன்னர்மகிழ்ந்திட
வாறடப்பரிமள கந்தமும்வீசிட (தூ)

தட்டிசல்லடம் ஒட்டியிருககியே
தண்டையும்வவண்டையும் காலிலிருக்கியே
பட்டையம்பரிசைவாளும் சொரிகியே
பார்த்தவர்மெச்சிட மீசைமுருக்கியே (தூ)

மன்னர்கள்மெச்சவும் வீரியம்பேசியே
வண்டர்கள்துண்டர்கள் தன்னையுமெச்சியே
உன்னிதமாகவே கைகளைவீசியே
உச்சிதமன்னனைக் கண்டுமேகூசியே. (தூ)

தூதர் கவி,

சங்கரன்கிருபையாலும் தாழ்வில்லாவாழ்வைப்பெற்று
எங்குமேபுகழும்காசி யிறைவனேபாதம்போற்றி
மங்களமாகயிந்த மகாகொலுதன்னில்வேண்டி
எங்களையழைத்தசேதி இன்னதென்றறிவிப்பீர்.

வசனம்.

சரணம் சரணம் காசிபூபதியே இந்தயடியார்களை இச்சபைக்கு வரவழைத்த சேதியை இன்னதென்று தெரியவியு மகாராசனே.

காசிராஜன் கவி.

செமமதுபுகழுகின்ற சேவகதூதாகேளாய்
மகளம்பைதன்னையிப்போ மகிழ்ச்சியாய்சிவிக்கையேற்றி
புகழ்பெரும்வீஷ்மருக்கு போதவேநன்மைசொல்லி
வகையுடன்மணஞ்செய்விக்க வந்துரைசெய்குவீரே.

வசனம்.

கேளுங்கள்தூதுவர்களே என்னுடைய குமாரத்தியை மூடுபல்லக்கிலேற்றிக்கொண்டு அஸ்தினபுரி வேந்தனாகிய வீஷ்மாசாரிக்கு நாம்சொன்னதாக பிரியவசனம் சொல்லிமணம்புரிய வகைதேடிவாருங்கள் தூதுவர்களே.

தூதுவர்கள் வசனம்.

இதோ தமது உத்தாரப்படிக்கு அப்படியே சொல்குவோம்.

பொது வசனம்

இந்தப்ரகாரம் தன் தந்தை பல்லக்கிலேறி அஸ்தினாபுரிக்கு போகும்படியாய்க் கட்டளையிட அம்பை மூடிட்டு அஸ்திபுக்கு பல்லக்கி லேறிசெல்கின்றவிதங் காண்க

நொண்டிச் சிந்து.

காசிதேச பூபதியேபோற்றி-நல்ல
காரியமரிந்திடவே வீரசூரர்கூடி
மாசிலாதஅம்பைமணம் வாட-நல்ல
மங்களத்தொனிமுழங்க மாதர்கள்கொண்டாட
ரத்தினசிவிக்கை மேலேற்றி-நல்ல
நாகரீகமாகவெகு சேவகர்கள்சூழ
கைத்தளஞ்சமரி சின்னம்பாட-அந்த
காசிபதிவிட்டுவெகு தேசமும்கடந்தார்
மேளதாளம் தம்பூருபாட-வெகு
வீரியபேரிகைடங்கா மீரியமுழங்க
தூளெழும்பசேனைகள் நடக்க
சோதிமுடிமன்னரெல்லாம் யேதென்றுநடுங்க
விந்தையாகவெகுதேசம் தாண்டி-நல்ல
வீரியத்துடனே வரதீரர்கள்நடுங்க
வந்தாரே அஸ்தினாபுரிக்கு-நல்ல
மாசில்லாமணிமகுட ரரசன்மொழியாலே-தத்தோம்

பொது கவி.

இப்படிஅம்பைபோக யிதற்குமுன்வீஷ்மாசாரி
செப்பவும்மன்னர்கூடி சிங்காரபந்தலிட்டு
அப்பவேசடங்குசெய்து அந்தணர்வந்துசூழ
சொற்படிமூவருக்கும் சோபனம்நடத்துவாரே.

வசனம்.

இப்படியாக அம்பைஅஸ்தினாபுரிக்குபோகஅதற்குமுன்னமே வீஷ்மாசாரியானவர் மகாசலுதியில் முகூர்த்தம் நடத்தும்படி உத்திரவுதர அப்பொழுதுமணப்பந்தல் அலங்கரித்து வேதியர் விதிப்படிசடங்குகளை நிரைவேற்றபெண்ணும் பிள்ளையும் வரவுத்தரவுதர சித்திரவீரியனும் அம்பிகை அம்பாலிகை மூவரையும் திருமணக்கோலமாயலங்கரித்து கலியாணசபைக்கு கொண்டுவருகிற விதங் காண்க.

சித்திரவீரியன் கவி.

நலமானபெண்பிள்ளைக்கு நலங்கிட்டுஸ்தானம்செய்து
விலையிலாபஞ்சரத்தின வேடிக்கைபணிகளிட்டு
மலறணிசுகந்தம்வீச மாதரும்அருகில்சூழ்
பலமன்னராசர்சூழ பந்தலில்வருகின்றாரே.

சித்திரவீரியன் தரு.

அன்னநடைமின்னல்வடி அம்பிகையம்பாலிகையும்
மன்னர்மெச்சசித்திர வீரன்வந்துமேவினான்
தங்கமணிபூஷணங்கள் அங்கமெல்லாம்சோதிமின்ன
மங்களசபைக்குசித்திர மன்னனும்வந்தான்
அணியணியாதாதியரும் அரசர்களும்வரிசையாக
மணிபணியலங்கரித்து மன்னனும்வந்தான்
வேதியர்கள்கோஷ்டம்பாட பூதலத்தோர்வந்துநாட
தீதிலாதமணவரைக்கி தீரனும்வந்தான்.
சித்திரன்வீரன்தன்பால் சேயிழைமாரைவைத்து
பத்தியவேதகோஷ்டம்பாடி யந்தணருங்கூடி
எத்திசைமன்னர்காண யெங்கெங்கும்சோதி[illegible]க
முத்தணிமாதர்சூழ முகூர்த்தமும்செய்கின்றாரே.

சித்திரவீரியன் தரு.

ஸ்ரீராமஜயம் சீதாபதிராமஜயம்
அந்தணர்கள்விதிபடிக்கு அரசாணிகால்நாட்டி
விந்தையுள்ளசால்கறகம் விதம்விதமாய்விளக்கேற்றி
நவநீதபந்தலிட்டு நற்கதிரோன்பாலிகையிட்டு
அவனிமன்னர்மெச்சிடவே யலங்கரித்துசட்[illegible]
மணமாலைதான்தரித்து மாதம்பிகையம்பாலிகையும்
குணமானவேளையிலே கோவிந்தாவென்றுசொல்லி
மங்கிலியம்தான்தரித்து மனமகிழ்ந்துதான்மீந்தா
தங்கமுடிதான்தரித்து தரித்தாரேபெண்கள்பட்டம்
ஸ்ரீராமஜெயம் ராமஜெயம் ராமஜெயம் ராமஜெயம்

சித்திரவீரியன் கவி.

திங்கள்சேர்குலத்துவேந்தன் சித்திரவீரக்கும்னு
மங்கையம்பிகையம்பாளம் மாதர்கள்யிருவருக்கும்
பொங்கமாமணமும்செய்து புகழ்முடிசூட்டிநிற்க
துங்கமாம்காசிமன்னர் தூதுவர்வந்துசொல்வார்.

77584

தூதர் கவி.

கன்னமாம்மதனைவெல்லும் காங்கைபாசருண்ம்காசி
மன்னவநணுப்பவந்தோம் வடிவுள்ள அம்பைலிகையை
என்னமாவிட்டீரென்று இவ்வேளைமணமும்செய்ய
சொன்னதையரியச்சொன்னேம் சுகம்பொருடத்துவீரே.

வசனம்.

கேளும் வீஷ்மாசாரியரே மூன்றுபெண்களையும் உமக்கு தந்த தென்னபேதமையென்றும் பெண்சொல்லைக்கேட்டு நடுவழியில் விட்டுவந்ததுநீரே பெண் அருமைதெரியாதவரென்றும் அரசுதண்மையில்லவேயென்றும் இந்தப்பெண்ணை யாதொருதடையில்லாமல் விவாகம்செய்துக் கொள்ளும்படி உமக்குதெரிவித்து வரும்படி சொன்னுற் விவாகம்செய்துக்கொள்ளும் மகாராசனே.

வீஷ்மாசாரி தரு.

வந்துவார்த்தைபேசும்காசி விந்தைதூதாயென்னபுத்தி
எந்தனுக்குஇச்சையேதடா ஓ-தூதுவரே
முந்திசொன்னேன் இந்தசேதியை (வ)

தூதுவர் தரு.

சேதிசொல்லவந்தோமிப்போ மாதரையலையவிட
பாதகம்உனக்குநேருமே காங்கையபூபா
மாதைநீ மணம்புரிகுவாயே (சே)

வீஷ்மாசாரி தரு.

மணமதுபுரியுமென்ற குணமுடையதூதுவரே
அணிமலர்குழலிமாதரை ஓ-தூதுவரே
கினவிலும் நினைப்பதேதடா ம

தூதுவர் தரு.

நினைப்பதில்லையென்றுமன்னு தனிப்புகழைப்பேசவேண்டாம்
உன்னைப்பெருதாயென்னிவந்தோம் கங்கையபூபா
மனப்பழுது யெண்ணவேண்டாமே (நி)

வீஷ்மாசாரி தரு.

ஆகுமோஒருமன்னவன் மோகம்கொண்டுவார்த்தைசொன்ன
நாகரீகம்தன்னைவிட்டுமே ஓ-தூதுவரே
ஏங்கிவந்ததென்னக் காரணம் (ஆ

தூதுவர் தரு.

என்னசெய்வோம்உந்தனுக்கு மன்னவன்மகிழ்ந்தளித்த
கன்னியைவேண்டாமென்று சொல்லியகாங்கைபூபா
மன்னவன் அகத்திவிட்டாரே. (எ)

வீஷ்மாசாரி தரு.

விட்டபெண்ணைகாட்டவேண்டிகேட்டவருலகிலுண்டோ
விட்டுபேசவந்தாய் நீபோடாஓதூதுவரே
சுட்டசட்டி தொட்டிடுவாரோ (வி)

தூதுவர் தரு.

வாருமையாஉங்களுக்கு ஆர்சொல்லுவாரோஞாயம்
சீர்குலையநல்லதல்லவே காங்கையபூபா
பார்புகழும் அம்பைநாயகி (வா)

வீஷ்மாசாரி கவி.

தூதரேபெண்களிச்சை துரத்தினம்வேண்டேனென்று
வேந்தனும்அமர்காண வீஷ்மிச்சிக்கொண்டேனிந்த
மாதரைவிட்டுவேரே மாதரைக்கொண்டோனால்
பாதகம்வருமெனக்கு பதிவிட்டுயேகுவீரே.

வசனம்.

கேளுங்கள் தூதுவர்களே நான்முக்தி பெண்போகம் இச்சை இராஜ்ஜியஇச்சைவேண்டுவதில்லையென்று தேவறறியவீஷ்மித்துக் கொண்டேன் அதனாலே வீஷ்மாசாரியென்றும் பேர்பெற்று வருகின்றேன் அதுகாசிபூபதிக்கே தெரியவரும்யான் அந்த அம்பையைநீக்கி வேரொருபெண்களை மணம்செய்வேனாகில் இந்த பெண்பாவம்யெனக்கேவரும் நீங்கள்என்பதியைவிட்டு அப்புறம் யேகிபோங்கள் தூதுவர்களே.

பொது வசனம்.

அப்போது அம்பை வீஷ்மாசாரியை பார்த்துசொல்லுவது.

அம்பை தற்கம் தரு.

மன்னனுனென்ன செய்வேனையோ
மலரடிக்கேஒரு கோடிசருணமிது
என்னைமணம் செய்திடுவாயிப்போ
எங்கிமனம்வாட நீதியுண்டோ (ம)

வீஷ்மாசாரி தரு.

வாராய்நீபெண்மயிலே இந்தவாதுசெய்யவந்ததேதடீ
பாராசைமாதராசை விட்டுபுத்தி
பத்திபுரிந்துவந்தேன் சத்தியமாய்

அம்பை தரு.

அய்யோனுனுன்னைவிட்டுவேர ஆதரவுமில்லைநீதிமன்னு
செய்யாதகாரியங்கள் யென்னுசெய்தேனோ
நானுந்தனே வைய்தனே. (அ

வீஷ்மாசாரி தரு.

எந்தனைமெத்தமெத்தநீயும் யிகழ்ந்ததென்ன
புகழ்ந்ததென்ன பெண்ணரசே
உந்தனைநான்மணம் செய்வேனென்று
உம்பறரியச்சொன்னேன் நம்பாதே (எ)

அம்பை கவி.

சதுர்வேதமுணர்ந்த சத்தியபூபாகேளாய்
அதிவிதகற்புமாதர் அந்தனர்சிசுவுமாவும்
பதரியேகொன்றபாவம் பரந்திடசெய்கையுண்டு
துதிமாதர்அலையும்பாவம் துலையாதுமணஞ்செய்வீரே.

வசனம்.

கேளும் நீதிபிரதாபனே கற்புடைய ஸ்திரீகள் அந்தணர் பசு சிசு முதலானதுகளை கொன்றபாவம் நீங்குவதற்கு பரிகாரமுண்டு ஒரு ஸ்திரீ புருஷபாக்கியமில்லாமல் அலையச்செய்யும் பாவமானது ஒருக்காலும் நீங்காதென்று வேதமுறையிடுகிறது இப்படிக்கிமனம் முருகச்செய்யவேண்டாம் என்னைசந்தோஷமாய் விவாகம் செய்துக் கொள்ளும் மகாராசனே.

வீஷ்மாசாரி தரு.

மெத்தப்பயித்தியகாரி நீயும்
வேண்டிவந்தா யென்னைக்கோரி
கத்தகல்வியெல்லாம் யெத்தேபலுக்காதே
பத்தியரியாதசித்துக்காரிப் போடி(மெ)

அம்பை தரு.

அய்யோயிதணியாயம்எனக்கார்சொல்லுவார்வந்துஞாயம்
தய்யலை அலைந்திட செய்வதுதம்மமோ
வையகம்புகழ்ந்திட செய்யுமணமென்னை (அ)

வீஷ்மாசாரி தரு.

கண்டபடிபேசும் நீலி-யானுங்
கட்டுவனோ உன்னைத்தாவி
மண்டலமன்னவர் கண்டுநகைத்திட
சண்டைசெய்யவந்தாய் தண்டிப்பேனுந்தனை (க)

அம்பை தரு.

சற்றுமிதங்காத கோபமென்னைத்
தள்ளிவிட வரும்பாவம்
வெற்றிபெருமன்னா நத்திவந்தேனுன்னை
சித்தமிறங்கி கிபைவைத்தென்னாக்ஷியும் (௨)

வீஷ்மாசாரி தரு.

பேதகமெண்ணியே கள்ளியெதி
ரேசவந்தாய் மொழிதள்ளி
வாதுசெய்யவேண்டாம் யேதுன்னைகொள்வது
காதகமாய்ப்போன சூதுகாரிபோடி (பே)

அம்பை தரு.

யேதுக்குஎன்மீது மோடிஅய்யோர்
ஏங்கலாமோ ஞானம்வாடி
வாதுக்குகந்திடும் பாதகிநானல்ல
பேதிக்கிரீர்மணம் ர்தி க்குரீர்வீணய் (ஏ)

வீஷ்மாசாரி தரு.

வாடிதவிக்காதே போடிகொள்ள
வந்திடுவார் மன்னர்கோடி
நாடியேசாளுவன் தேடியழைக்காமல்
போடியென்றுசொன்ன நாட்டகசாலியே (வா)

அம்பை தரு.

வந்தஅரசரை வாட்டிநீயும்
மகிழ்ந்துவந்தா யென்னைக்கூட்டி
எந்தன்புத்தியாலே உந்தனைவிட்டிட
அந்தஅரசனும் சொந்தமாய்க்கொள்வாரோ

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

அரியாதபருவமதி லொருவக்கு
அன்புசொல்லி பின்புமதைமனதில்வைத்து

சரியானமன்னர்வந்தா லுன்னொடி
சாலுவற்குமணமாலை சூட்டிடாமல்
பெரிதானஉன் தந்தை எனக்களிக்க
பேதையும்நீர் என்னைவிட்டுபிரிந்திருக்க
நெறிதானோ அங்கங்கே அலைந்துவந்தால்

வீஷ்மாசாரி தரு.

பேசஞ்செய்குவேனோ போடி
மாதராசைதேடியே யான்
ஏசினாலும்இன்னம் பேசினாலும்மென்ன
இகழ்ச்சியும்புகழ்ச்சியும் மிதனாலேதடிகூடி (பே)

அம்பை கந்தார்த்தம்

ஈசருடசடைதனிலே தங்கும்கெங்கை
யீன்றெடுத்தமகிபாலா திவ்யலோலா
மாசிலாமேனியரே செய்தகுற்றம்
மனம்பொருத்து அடியவர்மேல்கிருபைசெய்து
தேசமெங்கும்மரிய யென்னைநீர்கலியாணம்
செய்யாதபோதுமொரு அரசருக்கு
பாசமுடன்என்னைமணம் செய்துவைத்தால்

ஷை தரு.

பார்புகழும்மன்னனே கிருபைவைத்து
காரும் கருணையாளனே
வாரும்மெனது குறைதீரும்கெம்பீரனே
வீரசூரர்கள்மெச்சும் மாராயதிகதீரா (பார்)

அம்பை கந்தார்த்தம்.

வெட்டிடவேதுயர்போகும் வேந்தர்வேந்தே
வேந்தருக்குமனம்புரிய துயரம்போகும்
கட்டழகா உன்னைவிட்டு போனபோதும்
கால்முள்ளவரைக்குமெந்தன் துசர்போகாது
எட்டாதசுணிக்காக ஏரியேரி
எங்கவிதிவந்துதையோ என்னசெய்வேன்
தட்டாதேஎன்வார்த்தை தன்கீர்த்தி

ஷை தரு.

தயவுஎவ்வளவில்லையோ அய்யையோமன்னா
சயமுமில்லாத தொல்லையோ

கழல்விழிசோரவும் மையல்பெற்றுமீரவும்
துயரப்படயெனக்கு அயன்விதித்தவிதியோ

வீஷ்மாசாரி கவி.

ஆசைகொண்டுவெகு விடத்தில்அலையவந்த
அம்பையேநீ பண்ணிபன்னிபேசினாலும்
ஈசன்மலறணிமார்பில் இந்திரன்கந்தர்
எழிலானகுருசெகத்து மன்னறெல்லாம்
பாசமுடன் உந்தனுக்கு பரிந்துஎன்மேல்
படைஎடுத்துவந்தாலும் மவர்கள்காண
காசிபதியீன்றெடுத்த பெண்ணேன்னை
கலியாணம்செய்வதில்லை யேகுவாயே.

வசனம்

கேளும் பெண்ணே அம்பையே நீ என்ன பரிதாபம் பேசின போதிலும் பிர்மா விஷ்ணு ருத்திரன் தேவேந்திரன் தேவர்கள் பூமண்டலத்து குருமுதலான ராசாதிபதிகளெல்லாம் உனக்காக பரிந்து என்மீதுசமருக்குவந்தபோதிலும் அவர்கள்சாக்ஷிதாகஉன்னை மணம்புரிவதில்லை நீ நடவும்பெண்ணே அம்பையே.

அம்பை புலம்பல் தரு.

என்னநான்செய்வே னய்யோசிவனே
இந்தவிதிக்கோ யான்வந்துதித்தேன்
மன்னனனுப்பிய தூதுவரேவாருங்கள்
மாநகர் சேருவோமே
வந்தேன்மதிகுலேந்தே மூந்திமன்னனுக்கு
சொன்ன நன்மொழியால்
எந்தன் விதிவசத்தை-சுவாமி
எவருடனே சொல்லிமுறையிடுவேன்
பேதைதவித்திடவே சுவாமி
பிர்மன்விதித்தவிதி யிதுவோ
வாதைபடும்படிக்கு காசிமகபாவி
வயிற்றிலே பெண்பிறந்தேன்
தள்ளாதவார்த்தை என்றேயெண்ணி
சற்பனைவந்திட முற்பழியோ
கொள்ளாகுமரியென்று யென்னை
கூசாமல்சொல்வாரே அஞ்சிடவே

அம்பை கவி.

பாவிநானென்ன செய்வேனையோ
படைக்கஞ்சா தந்தையரேபாதம்போற்றி
மேவியந்தவீஷ்மருக்கு அனேகம்சொல்ல
விண்ணவரும்தாமரிய வேண்டேனென்றார்
தாவிடவே அவரையானிப் பலநொன்றில்லை
தனியாகிநான்தவிக்க தலையிற்பிரம்மன்
ஆவிப்பதரிடவிதித்த விதியைவெல்ல
ஆராலுமாகாது யென்னசெய்வேன்.

வசனம்.

அய்யயோ தந்தையே தூதுவரும் யானுமாகப் போய் வீஷ்மாசாரிக்கு ஏதோ பிரிய வசனம் அனேகம்சொல்லியும் கேளாமல் மணம்செய்வதில்லை என்றும் மருக்கவந்தேன் இனி என்னசெய்வேன் தந்தையே.

காசிராசன் புலம்பல் தரு.

பாவிநானினியென்னசெய்வே	னய்யோஎந்தன்மகளே
பரதவித்திட	உந்தன்தலைவிதியோ
ஆவிபதரிவாடுதிப்போ	அம்மாயெந்தன்மகளே
அருமையாக	உனைவளர்த்தனே
பிடித்தக்கொம்பு	மெரித்தகொம்பாமே அம்மா
பிச்சிக்கொண்டது	போலேயாச்சுதே
துடித்துயென்மனம்	வாடுதையையோ-அம்மாயிந்த
தொல்லைக்கோ உன்னை	செல்வமாய்வளர்த்தேன்
கட்டழகிநீ தவிர்த்திட	அம்மாயெந்தன்
கண்ணால்பார்த்து	குண்ணலானனே
மட்டில்லாதசெல்வமாய்	வளர்த்து அம்மாஎந்தன்
வாடிதவிக்க	தேடிவந்தாயே
கொஞ்சும்கிளியே	ரஞ்சிதமயிலே அம்மாஎந்தன்
கோடிமன்னவர்	நாடிவந்தாரே
வஞ்சகமில்லாசாளுவ	பதிக்கி-அம்மாயெந்தன்
மாலைசூட்டாமல்	தாலியிழந்தாயே

காசிராஜன் கவி.

இன்னமொருயோசனைகள் செய்வேன் தூதா
இப்புவில்மன்னவரும் தேவரெல்லாம்
சொன்னமொழிகேளாத வீஷ்மாசாரி

துஷ்டநல்லகுரு மொழியைதள்ளானென்று
மன்னவரும்சொல்லவந்து கேட்டிருப்பேன்
வளர்பெருகும் அம்பையுடன்நீங்களேகி
உன்னுடையசீஷன் செய்பிழையாதென்று
உயர்பரசுராமருக்கு உரைத்திடாயே.

வசனம்.

கேளுங்கள் தூதுவர்களே இன்னமொருயோசனை யிருக்கிறது அதாவது பிரம்மாதிதேவர்முதல் பூலோகராசாதிபதியாவரும் இதற்காகபரிந்து சொல்லினும் தடுத்து விடுவாரென்றும் அந்த வீஷ்மருக்கு குருவாகிய பருசுராமருக்கு தெரிவித்தால் அந்த வார்த்தையைஇகழாதவரென்றும் தெரிந்து இருப்பேன்நீங்கள் அம்பையைக் கூட்டிக்கொண்டுபோய் உன்சீஷன் இப்படிசெய்து இருக்கிறனென்று நடந்தசேதியைக்கூரி அவிடத்தில் நடக்கும் காரியம்யாவும் அரிந்துவந்து தெரிவிப்பாய் போய்வாரும் தூதுவர்களே.

பொதுவசனம்.

அப்போது அம்பையும் தூதுவரும் பரசுராமரை நாடிபோக அப்போது பரசுராமர் சபைக்குவருவது.

பரசுராமர் கவி.

மகமாரிரேணுகையு மீன்றபாலன்
மண்டலத்துதேவர்களும் வணங்கும்சீலன்
மிகவதனக்கெம்பிரன் யெங்கும்சோதி
விதியமரர்மதிபேசும் வீரதீரன்
தகதகென ஆடைப்பரிமளங்கள்
தணுவாளும்கேடையம் பரிசபாலாயேந்தி
செகம்புகழும்மதிவீரர் நெருங்கிச்சூழ
செயபரசுராமருமே வருகின்றாரே.

பரசுராமர் தரு.

பதிமெச்சும்மதிவித்து துதிபெற்றழகில்மிக்க
பரசுராமரும்வந்தாரே பலசாலியரான (ப)

கதிரொத்தமணிமுடி உதையத்தழசென்னவே
காந்திகள்வீச துதிவேந்தர்கள்பேச-நல்ல
காருபாரிகள் வீரியதீரரும்
சாரியாவர பாருமதிர்ந்திட (ப)

மேருதணுவெனவே வீரதணுவைபற்றி
விண்டலத்தமரர்துதிக்க மலர்மாரிசொரிந்து (வீ)

SA 11-22

கோறஉத்தண்டமன்னர் ஆறுமெதிர்வணங்க
குண்டலமாடகீர்த்தி எண்டிசைபாடவெகு
கோலமாமணி மாலைகுலுங்கிட
சீலமாமணி வேதியர்பாட (ப)

பச்சமேனியுமணி வச்சிரமழுத்தியே
பலமணிகளிலங்கவே வெகுவிசித்திரமாக (ப)

கச்சணிமாதராடவெகு உச்சிதமெதிராட
கத்திகள்வீசவீரர் வெற்றிகள்பேச
மீரியேபூரிகை பேரிகை
தாளகின்னரிமேளமுரசுகள் கோளமுழங்கிட (ப)

நார்த்திசைபுகழ்கின்ற கார்த்திகைவீரனைவென்ற
நற்புயவலுதீறன் மிகுகெம்பீறன் (ந)

பார்த்தவீறர்கள் எல்லாம்
தோத்திரம் புரிந்திட
பாவலர்பாட வீரர்காவலர்கூடநல்ல
பைந்தருநிழலிரு விந்தையிலதிவித
சுந்திரர்கொலுவினில் வந்தனர்சூழ (ப)

பரசுராமர் கவி.

என்னடிபணிந்த எதிர்ப்புகாவலரேஎழிலான
சமதக்கினிமுனிவ ரெக்கலாதேவியிருவருக்கு
மைந்தனயிப்புவி தன்னில்வந்து
கன்னல்வில் மதனைப்போலவே
விள்ங்கிகைபுழு வாளிகளிலங்க
கன்னல்வில் மதனைப்போலவே
விளங்கிகை புழுவாளிகலிலங்க
கண்டவர்நடுங்கிதெண்டமும் செய்யக்கனவீரனுமாகி
அன்னவன் நடுங்கார்த்திகை
வீரர் அர்ச்சுனதிக ளெனுமூவேழுவர்
தலைமுறையைக் கருவறுத்திட்ட
அதிபலனுமமே தென்றால்
பன்னியேமுனிவர் மன்னவர்
மராபலவரும்மகிழ்ந்து கொண்டாடும்
பார்புகழ்பரசுராம னென்றுரைக்கும்
படைமுகரண சிங்கன்நானே.

வசனம்.

கேளுமப்பா காவலனே சமதக்கினி மகாமுனிவர் தேவியான எக்கலாதேவி கெற்பசுதசறனுய்விளக்கி மன்மதனே யிடழிக்கும்படி யான பச்சவர்ணம்பொருந்தி மழுவாயுதம் தன்கையிலேந்தி பிர்மா திதேவர்களெல்லாம் நடுநடுங்கும்படியான கார்த்திகவீர அர்சுனதி களை 21-தலமுரைவருக்கும் கருவருத்துவ்வத்த எனது நாமதேயம் யாதெனில் சர்வத்திராளும் நம்மை துதிக்கும்படியான பரசுராம ரென்று நாமதேயமடா காவலனே.

பொது வசனம்.

இப்படி பரசுராமர் கொலுவிருக்க அம்பை தேடிவருகிறவித ம் எப்படியென்றால்.

அம்பை வசனம்.

ஆரப்பாகாவலனே பரசுராமசுவாமியைக் காணவேண்டி வந் தேன் வழிவிடுகாவலனே.

காவலன் வமனம்.

ஆரு இருந்தபோதிலும் வழிவிடமாட்டேன் அப்புரம்போம்.

அம்பை கவி.

விடவழிமனமில்லாத வீரசேவகரேகேளாய்
கடல்சூழும்உலகமாளும் காசிபூபதியளித்த
வடவான அம்பைஉந்தன் மலறடிகாணவேண்டி
அடவுடன்வந்தசேதி அரிக்கைதெரிவிப்பீரே.

வசனம்

சேளுங்கள் காவலரே காசிபூபதியளித்த பெண்வண்டு நிற முடைய அம்பை உமதுபாதம் காணவந்ததாய் தெரிவித்து பதில் சொல்லுங்கள் காவலர்களே.

காவலர் வசனம்.

சரணமையா காசிபூபதி செல்வியான அம்பைஉமது பாதம்கா ணவந்திருக்குராளையா சுவாமி.

பரசுராமர் வசனம்.

அடா காவலனே அந்த அம்பையை அழைத்துவாருங்கள் கா வலரே அப்படியே.

காவலன் வசனம்.

அழைத்துவருகிறோம் சுவாமி.

அம்பை தரு.

சரணம்சரணம் சுவாமிசந்திரவதனு
பரிவாகமகமாரி, தந்தசுதனு (சர)

உமதுபதபரிவாக யெனைக்காரும்
ஏரிமழுவேந்தியகரனே திருவடிகள் (சர)

இந்திராதிதேவர்கள் சிந்தைமிகமகிழ்ந்து
வந்தனம்செய்கின்ற விந்தைபொற்பாதனே (சர)

மாரனென்னலேயிந்த பாரும்புகழவந்த
தீராயதிகம்பீரு வீராதிவீரனே,சா (சர)

பண்ணுமறைமுடிவில் மன்னும்தயாபரனே
வன்னமணிப்பூஷணு என்னையாதரித்திடும் (சா)

பாசுராமர் கவி.

அஞ்சனமேனியான அம்பையேசுகத்துவாழி
கஞ்சமாம்முகம்வாடி காணவேயழுதுவிம்மி
சஞ்சலமாகவந்த சங்கதிஇன்னதென்று
வஞ்சியேமகிழ்ச்சியாக வந்தனைகூறுவாயே.

வசனம்.

வாரும் பெண்ணே அம்பையே செந்தாமரை கமலம்போன்ற திரவபூஷணியானது வாடிகண்ணீர்சோர அழுதுநீர்நம்மிடம் வந்த சமாசாரங்களைஒன்றும் கபடமில்லாமல் சொல்லிவாரும் அம்பையே.

அம்பை அகவல்.

அய்யனே போற்றி அறவபூஷணியாள்
வையகம்புகழும் மகிழ்ச்சியாயின்ற
நாதனேபாதம் நாடினான்வந்த
சேதியையுரைப்பேன் செவிக்கொண்டுகேளும்
காசிபூபதிக்கு கன்னிநாம்மூவர்
மாசிலாவதியாய்வளரும் இன்னாளில்
பூபர்களரியபூவை யெங்களுக்கு
சோபனம்செய்ய சுயவரம்நாட்ட

வந்திட அரசர் மகிழ்ச்சியானங்கள்
விந்தைமன்னவரை மேவியேபார்க்க
அஸ்தினபுரிக்கு அதிபனும்வீஷ்மர்
சித்திரவீரியன் இருவரும்வந்து
மணமாலேசூட்ட மகிழ்ந்திடும்போது
யிணையிலாமன்னர் இகழ்ந்திட அவரை
சங்கைகொண்டெங்கள் ஸ்தானமேபோக
அங்கவரிருந்து அரசரையெதிர்த்து
சிரக்கமேசெய்து சிலேதனேப்பூட்டி
பரக்கவேமன்னர் பாணமும்மீட்டி
வென்றிடக்கண்ட வீரியதந்தை
நன்ருகயெங்களேந்துர வைத்துக்காண
வீஷ்மரும்தம்பியும் மிகமனமகிழ்ந்து
வேடிவில்லேந்தும் வீரனேப்போலவே
எங்களேரதத்தி லேற்றியோபோக
மங்கைநானவரை வணங்கியேநின்று
வஞ்சினன்கல்வி வாசிக்கும்போது
சஞ்சலமான சாளுவபதிக்கு
தேவிநானென்று சேதியைக்கூற
ஆவலாயனுப்ப அனுமதிபெற்று
போகவேசாளுவன் பிரியமும்வெருத்து
ஆகாதுஇந்த அகிலமுமரிய
ஒருவருக்கீய்ந்தார் உன்னிடதந்தை
பிறகுநீவந்தபேதையே வேண்டேன்
என்றுமேயகந்த யீன்றதந்தையரே
கண்டுநான்கூற காவலனுடனே
அனுப்பவேவீஷ்மர் அவரடிவணங்கி
மணப்பழுதுரைக்க மன்னனும்கடிந்து
கன்னியர்வெருப்பம கருத்தினில்வெறுத்த
அன்னிலேக்காட்டி அகத்திடும்போது
தந்தையைக்கண்டு தயங்கிடஅவரும்
உந்தனலாகுமென்றுரைத்திட வந்தேன்
குருமொழிதவரா கொற்றவரென்றும்
பெருமையுன்கீர்த்திப் பிரதாபமுரைத்தார்
இவ்விதம்வந்து ஏங்கவுமானேன்
செவ்வையாயுக்தன் சீர்பாதம்கண்டேன்

நாலுந்தன்செல்வி நம்பினேன்பாதம்
ஆனந்தமாக அந்தவீஷ்மருக்கு
சோபனம்செய்து சுகமெனக்கருளும்
பாபவிமோசனம் பாதமேபோற்றி

பரசுராமர் கவி.

அம்பையரேநீயொன்றுக் கஞ்சவேண்டாம்
அரிவையெந்தன் மொழிதவரு வீஷ்மாசாரி
உம்பரயன்மால்மொழியை தடுத்திட்டாலும்
ஒருக்காலுமென்மொழியைத் தடுக்கானந்த
செம்பவளபாதமுடைய வீஷ்மருக்கு
செய்விப்பேன் உன்னைமணம் வலுமைபாரா
யம்புவியோர்மெச்சுகின்ற ரதத்திலேற்றி
அஸ்தினபுரிக்குநாம யேகுவோமே.

வசனம்.

வாரும்பெண்ணே அம்பையே நீர்யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் உன்னையந்த வீஷ்மருக்கு விவாகம் செய்துவைக்கிறது எனக்கொருபெரிதல்ல அதுவேதென்றால் இந்திருதிதேவர் முதலானவர் வார்த்தையைதடுத்த போதிலும் ஒருக்காலும் என்வார்த்தையை தடுக்காதவன் குருபத்தி விசுவாசமுனடயவன் அந்தவீஷ்மருக்கு இன்றையதினமே விவாகம்செய்து வைக்கிறேன் எனது வல்லமையைப்பாரும் இப்பொழுதே இந்தரதமேரிக்கொண்டு அஸ்தினபுரிக்கு போவோம் அம்பையே.

பரசுராமர் தரு.

ஒளிபெற்றஅம்பையே வாருமிந்த
நவரத்தின ரதத்தின்மேலேறும்
களிபெற்றுநீவாரும் கூடிஇதோ
கடுகியேஅஸ்தின புரிக்குப்போய்நாடி
உனக்குமணஞ் செய்வேனன்பாய்நீயும்
உள்ளமும்களிப்பாக வந்திடுமென்பாய்
நினைக்கும்போதே முடியாதோயிந்த
நெடியஉலகமெல்லாம் கண்டரியாதோ
வச்சிரபலபணி சூட்டிகையில்
வல்லுலக்கையும்பாலா வில்லுகளீட்டி
விசித்திரமாய் ரதமேரிநல்ல

வீரர்கள்சூழவே வந்தாரேகோரி
பேரிகைமுரசுடங்கா பாடநல்ல
பேரானமாதர்கள் நாட்டியமாட
தீரர்கள் வந்தெதிர்காணநல்ல
சித்தசப்பூபதி மெத்தவேனுந்தான்

பொது கவி.

மதிமுகஅம்பைக்காக வந்திடபரசுராமர்
இரதகஜதுரகசேனை நானிலம்பரவிசூழ
அதிவிதமுடனேவந்து அஸ்தினபுரியைக்காண
இதுவிதமறிந்துவீஷ்மர் எதிர்கொண்டுயேகுவாரே.

வசனம்.

இப்படியாக பரசுராமர் ரதகஜதுரக பதாதிகளுடனே வருகிற தி வீஷ்மாசாரியரிந்து சொல்வதுயாதெனில்.

வீஷ்மர் கவி.

சித்திரவீரியனேநாமும் செய்தவப்பலனேயின்று
குற்றமொன்றில்லாதிவ்விய குருபாதம்கண்டுபோற்ற
பத்தியாமும்சென்று பாதபூசைகளேசெய்து
சித்தமுபுமகிழ்ந்துர சேதியையரிவோம்வாரும்.

வசனம்.

வாரும் தம்பி சித்திரவீயரினே குருவானவர் நம்மைக்காணும் படி என்னவிண்ணியம் செய்தோமோ அரிகிலேன் யிப்பொழுதே எதிர்சென்று அவர்பாததெரிசனம் செய்வோம்வாரும் தம்பிசித்திர வீரியனே.

வீஷ்மாசாரி தரு சரணம்.

குருநாதரேசரணம் சரணமையா (கு)

குருவேதிருவருள் பெருகியநாதா
பரிவாயருள்தரும் நருமலர்பாதா (கு)

தேவதேவனே வந்தனமையா (தே)

தேவனே சீவதயாபரலோலா
தாவும்பூங்கிளியேன் ரேணுகைபாலா (கு)

அய்யனேமெய்யனே வையகம்போற்றும்
செய்யப்பொற்பாதனே தீவினையைமாற்றும். (கு)

நாதநாதனே எனையாண்டிடுகின்ற (நா)

நாதனே திவ்விய பாதனே அரி
கோதிலாத நவநீதனே போற்றி (நா)

வீஷ்மாசாரி வசனம்.

சரணம் சரணம் குருநாதா இந்த அடியவனையொரு பொருட்டாகவெண்ணி தேவரீர்வந்தது இன்னதென்று திருவுளம்பற்றியருளுமையா சுவாமி காத்தனே.

பரசுராமர் கவி.

வேதசாஸ்திரமுணர்ந்த வீஷ்வரேசுகித்துவாழி
தீதிலாமன்னுவந்த சேதிகளென்னவென்றால்
பூதலம்புகழும்காசிபுத்திரி யம்பைக்காக
நீதிகளுரைக்கவந்தேன் நீர்மணம்புரிகுவாயே.

வசனம்.

கேளுமப்பாயெனதுவார்த்தை தவராத வீஷ்மாசாரியே நான் இவ்விடம் வந்தது யாதுகாரியமென்றால் இந்த அம்பையானவள் நம்மிடம்வந்து முறைபாட அந்தமுறையை தீர்க்கும்படிவந்தேன் நீயாதொருதடை சொல்லாமல் விவாகம் செய்துக் கொள்ளும் ராசனே.

வீஷ்மாசாரி கவி.

அந்தணன்யிறைவன் மன்னரடியினைக்காணப்பெற்ற
சுந்திரக்குருவேயிந்த தோகைக்குளன்னைநாடி
வந்திடதகுமோ தூது வரவிடதக்ஷணத்தில்
சிந்தையுமகிழ்ந்துவந்து சீர்ப்பாதம்காணலாமே

வசனம்.

சரணம்சரணமையா குருநாதரே அந்தணராகிய தேவர்களும்ற புவனத்திலுள்ள மன்னவரும் உமதுபாதம் காணவரும் படியான நீர் இந்தப்பெண்ணுக்காகயிந்த சிறுவனைநாடி வரத்தகுமா என்னை வரும்படி ஒருகடிதம் அனுப்பினால் அந்தக்ஷணமே வரமாட்டேனா அய்யய்யோ அடியேனுக்குபாவம் வரும்படிசெய்யலாகுமோ குருநாதரே.

பரசுராமர் தர்க்கம் தரு.

பாபமேது அம்பையாளை நீஅடா அப்பாவீஷ்மா
சோபனம்செய்து சுகமும்பெருகுவாய் (பா)

வீஷ்மாசாரி.

பெருவதேதுபெண்களாசையே ஓசற்குருநாதா
விரும்பிடாதவிரதம்பூண்டேனே ஓசற்குருநாதா (பெ)

பரசுராமர்.

பூண்டபோதுபெண்களாசையே அடாஅப்பாவீஷ்மா
மீண்டுவந்தபேர்களில்லே அடாஅப்பாவீஷ்மா (பூ)

வீஷ்மாசாரி.

இல்லையென்றுசொல்லலாகுமோ ஓசற்குநாதா
கல்லதல்லேகவிலும்தார்கள் ஓசற்குருநாதா (இ)

பருசுராமர்.

வார்த்தைதடுத்துபேசலாகுமோ அடாஅப்பாவீஷ்மா
பார்த்திடமனம்பாவையைப்புரிவாய் அடாஅப்பாவீஷ்மா

வீஷ்மாசாரி.

பாவைக்காகசொலும்வார்த்தையை ஓசற்குருநாதா
கேவலமென்றுகேழ்க்குமோ செவிகள்ஓசற்குருநாதா (பா)

பரசுராமர்.

செவிகட்கினியவசனமென்றுமே அடாஅப்பாவீஷ்மா
புவியிளெவரும்புகழ்ந்துக் கொள்வாரோஅடாஅப்பாவீஷ்மா

வீஷ்மாசாரி.

கொள்ளுவாரிந்தவார்த்தை தன்னையேஓசற்குருநாதா
தள்ளிவேருசொல்ல தடுப்பேனேஓசற்குருநாதா

பரசுராமர் கவி.

குருமொழியையிகழாத வீஷ்மரென்று
குவலயத்தோர்கொண்டாட கேட்டிருப்பேன்
தருமொழியைதள்ளி மருமொழியுரைக்க
தாங்காதகோபமுடன் விழிசிவக்க
வருமுனதுகீர்த்திக்கு அழிவுகாலம்
வஞ்சியணிமணம்புரிவா யில்லையாகில்
திரமுடையவில்லெடுத்து சமர்கள்செய்ய
வீரமுடன்தேரேறி வருகுவாயே

வசனம்.

அடாவாடா வீஷ்மா நீயோகுருமொழிதவராக்தபத்தி விஸ் வாசமுடையவனென்றும் யாவரும் சொல்லக்கேட்டிருக்கிறேன் இப்பவும் என்வார்த்தை மருவார்த்தை பேசினபோதே தாங்காத கோபமாகினேன் இனி உமக்கு அழிவுகாலம் நேரிடுமுன்னே இந்த ப்பெண்ணை விவாகம் செய்துக்கொள்ளும் இல்லாவிட்டால் என் னுடனே சமறுக்குவாரும் வீஷ்மரே.

வீஷ்மாசாரி கவி.

அய்யனே இப்படிக்கு கோபம்கொள்ளலாகுமோ
பெண்ணாசை வெருத்தாலே
மெய்யனேயெவர்களும் வீஷ்மரென்றும்
விளங்கிடவேவிரதமனப் பணியாய்கொண்டேன்
தையலரைவிட்டு எதைகேட்டபோதுந்
தாரண்மனைதன்னிமொழி நடப்பதுண்டோ
வையகமும்வானுலகம் நகைக்கஇந்த
வஞ்சியரேஉயிறளவிற் றீண்டிடேனே.

வசனம்.

கேளும்குருநாதா அடியவன்மீது இப்படிகோபம்கொள்ளலாகு மோநான் பெண்ணாசைராசியபாரமும் வவண்டேன் என்று வீஷ் மிக்கதேவர்களெல்லாம்எனக்கு வீஷ்மாசாரியென்று நாமதேயமளி க்கநான்தந்தமெய் தவமாகியவிரதமே ஆபரணமாய் பூண்டுவருகிறே ன்தேவரீர்பெண்வார்த்தையைவிட்டுவேரேஎன்னுயிரைகேட்டபோ திலும் தடையில்லாமல் தரும்படி மனதாயிருக்கிறேன் அப்படி யிருக்க விவாகம் செய்தால் பூலோகம் தெய்வலோகம் நகைப்பார் கள் இந்தவார்த்தை கினவிலும் நடவாதையா குருநாதரே.

பரசுராமர் தர்க்கம் தரு.

ஏதடாயென்னையெதிர்த்து வாதுபேசலாமோ
யிந்தமாதினைமணம் புரிகுவாய்காங்கையன்மன்னா
நீதியல்லவே நீதடுக்கவே (ஏ)

வீஷ்மாசாரி.

நீதியல்லயிந்தவார்த்தை மாதருசைநான்வெருத்தத்
திதிலாதேவவிரதனே சற்குருநாதா

பர்சுராமர்.

மணம்புரிவதில்லையென்று வந்தெதிரேபேசுகின்ற
குணமுடையவீரதீரனே காங்கையமன்னா
கணையெடுத்துஉன்னை வாட்டுவேன்

வீஷ்மாச்சாரி.

வாட்டினாலும்தேசம்விட்டு ஓட்டினாலும்மெத்தநன்மை
கூட்டிவிடஉன்னாலாகுமோ சற்குருநாதா

பரசுராமர் கந்தார்த்தம்.

தாமசாஸ்திரமறிந்து தையலைதவிக்கவிட்டு
குருமொழியிகழ்ந்தபாவி கொஞ்சமென்றெனைநினைந்தாய்
விரிகடலுலகம்வாட்ட விண்டலத்தவர்கொண்டாட
வரிசிலையெடுத்தேனிப்போ.

ஷை தரு.

வாடாயெனையெதிர்த்துமே காங்கையமன்னா (வா)

வாடாயெனையெதிர்த்துபோடா நொடிக்குள்உன்னை
நாடாகமனுமுன்னை சாடிப்பேன்பாரடா (வா)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

அய்யய்யோநன்மைதுன்மை அறியாதகுருவுக்கஞ்சி
செய்யாதவிரதம்வீணா செய்திடயிகழ்ச்சியுண்டு
பொய்யாதக்குருமொழிக்கு பொருந்தாதனாணுமுந்தன்
கையினால் மாண்டேனென்று.

ஷை தரு.

காசினிக்கடுக்காது சற்குருநாதா (கா)
காசினிமன்னவர் வாசவன்மெச்சிடும்
மாசிலாதகுரு தேசிகநாதா (கா)

பரசுராமர் கந்தார்த்தம்.

மங்கையைமணம்செய்கின்ற வார்த்தையைதடுத்தமன்னா
சங்கையில்லாமல்வந்து சமர்செய்ய அஞ்சலாமோ
பொங்கமாய்சும்மாநீயும் போவதுஒருக்காலுண்டோ
திங்கள்சேர குலத்துமன்னா.

ஷை தரு.

தீரமில்லையேபோடா எனையெதிர்க்க (தீ)
தீரமில்லைகாரிழை யெப்படிபோறது
சேதியைக்கூறடா அடடா (தீ)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

கொஞ்சமாயிகழ்ந்து பேசக்குருவென்று இனிஉமக்கு
அஞ்சுவதொருக்காலுண்டோ அணலடிப்பொறிபறக்க

மிஞ்சியேகோபம்கொண்டு விழிகளும்சிவக்கப்பொங்கி
சஞ்சலமகற்றி வந்தேன்.

ஷெடி தரு.

சமருக்கதிகவீரனே சற்குருநாதா (ச)

சமருகள்புரியவே அமரருமஞ்சிட
தமதுள்ளம்வாடவே நமனென்னவந்தேன் (ச)

பரசுராமர் கவி.

காங்கையமன்னுகேளாய் கார்த்திகைவீரன்தன்ன
ஆங்காடமடக்கிவென்ற அதிபலப்பேறெண்ணுமல்
தாங்காதகோபம்கொண்டு சமர்செய் துமடிப்பேன்வேண்டாம்
பூங்குழலழகில்மிக்கபூவையை மணம்செய்வாயே.

வசனம்.

வாராய் வீஷமாசாரியே நானேகார்த்திகைவீரஅர்ச்சுனதிகளை இருவத்
ார் தலைமுறைவரைக்கும் யுத்தத்தால் கருவருத்த எனதுவல்லமையையோ
துப் பாராமல் வீணுககோபம்கொண்டு என்னுடனே சமர்புரிந்து அனியா
ாய்மடியவேண்டாம் இப்பபொழுதாகிலும்இந்தப்பெண்ணை விவாகம்செய்
்கொள்ளும் வீஷ்மனே.

வீஷ்மர் கவி.

குருமொழிதடுத்தேனென்று குவலையம் நகைத்திட்டாலும்
அருங்கணைமழுவாளாகி ஆவிவையக்கொடுத்திட்டாலும்
பெருத்தலப்போதே ஆசைபிரித் துநான்வெருத்திருக்க
சாயலலஇனியுரைக்கும் சமறுக்குவருகுவாரே.

வசனம்.

கேளும்குருநாதா யென்னை குருமொழி கேளாத பாவியென்று யாவரும் நகைத்தபோதிலும் அதுஎனக்குபெருதல்ல ஞான்முன்னுலே பெண்ணுசையைவெருத்து பிர்மசாரியாஸ்விளங்கிய விரதத்தை இனிவிரதபங்கம் செய்வதுமகாயிகஷ்மயாதும் இந்தவார்த்தையைவிட்டு சமருக்குவாரும்குருநாதரே

பாசுராமர் சண்டை தரு.

துஷ்டப்பயிலேஉன்னைவெட்டி யெரியதணுபூட்டினேன்பாரா
கணைமீட்டினன் வாராய்

(சு) அஷ்டகெஜம்வீரிடவும் யானையும்ரதங்கள்பரி
யாடவும்படைமுரிந்துஓடவும் தேவர்களக்கிவாடவும்
நமனுமுன்னைத்தேடவும் சினமிகுத்து (து)

வீஷ்மாச்சாரி.

பாரியாதமேவீகுடனே பாணங்களெடுத்தேன்
நொடிக்குள்ளேவில்லை நானேத்திவிடுத்தேனே-வந்த
காரியமரிந்திடவேமீட்டவும் சிலையிலம்பை
பூட்டவும்யெனதுவீரம் காட்டவும்ஞெடிக்குள்உன்னை
வாட்டவும் மலங்கிகாதிழ்த்து (பா)

பரசுராமர்.

அண்டாதகோபமது கொண்டேன்னெடிக்குனுன்னே
ஆட்டுவேன்பாராய் படைசிதராட்டுவேன்வாராயடா
மண்டலத்தனவர்வாட கண்ட துண்டமாகவிழ
மாத்திசிலேயிலம்மை யேத்திபடையப்பெருங்காத்து
லோடும்படிக்கி தூத்திதும்சமாக (அ)

வீஷ்மாசாரி.

உக்கிறகாரமாகஎட்டுதிக்குள் அதிர்ந்திகடஓங்கினேன்பாருய்
சிலேயிலம்பைவாங்கினேன் கேளாய்
சக்கைசக்கையாகப் படைமிக்கவேகுருத்தியோடி
சாயவும்பதைபதைத்து மாயவும்மகந்தமாடி
ஓயவும்சினமிகுத்து காயவுருத்திரனைப்போல் (உ)

பரசுராமர் கவி.

சந்தனமைந்தாகேளாய் தரணியீரெழுக்குள்ளே
எந்தனைவந்தெதுக்க எவர்களுமஞ்சுகின்ற
விந்தையையரிந்திடாமல் வீணைவந்தேதுத்தாய்
உந்தனைக்கொல்லவேண்டி ஒருகணைதொடுப்பேன்பாருய்

வசனம்.

அடாவாடாசந்தனன் பெற்றவீஷ்மனே இந்தயீரேழுபதினாலு உலகிலும் விளங்கிய பரமசிவன் முதலானயாவரும்நானென்றால் நடுங்கும்படியான என்ன துவல்லமையையரியாமல் வந்தெதுத்தாய்உன்னைக்கொல்லும்படி ஒரு திவ்விய அஸ்திரம்வருகுது அதை தப்பித்துக்கொள்வாய் காங்கையனே.

வீஷ்மர் தரு.

என்னைசெய்த்திட உன்னலாகுமோஅய்யனே
எதுக்கித்தனைவீரியம் பேசுரீர்மெய்யனே
மின்னியஅக்கினிபாணம் வருகுதாதய்யனே

(அ) வீரரைவென்றிடும் வழுவாளிகளேந்தியகையனே
வேதியனும்மாதவனும் பூதலமும்மஞ்சிடவே
நாதாயெந்தனைவெல்ல போதாதுனக்குவலு
மாட்டிவிட்டேன் கனைப்பூட்டிவிட்டேன்
வீரகாட்டிவிட்டேன் யுனைவாட்டிவிட்டேன்
நாகபூஷணம்தந்திடுமைந்தா பேதைக்காகவேபரிந்துநீவந்தாய் (வே)

பரசுராமர் தரு.

மிக்கவீரியம்பேசியே வீரதீரனே
வெல்லவந்தியோ நல்லதாகட்டும்சூரனே
சக்கைசக்கையாயெடுப்பேன் பாரடாகோரனே
சந்தனராசன்பெற்றிடும் விந்தைமாரனே
சற்றும்மதிப்பில்லாமல் பித்தானுப்செய்திடவே
சுற்றவித்தைகள் மெத்தக்குதிப்பதேது
காரியனேயடா வீரியனே
மீரிவந்தாய் வலுகூறிவந்தாய்

கடல்சூழுலகதெல்லாம் மெந்தணைக்கோர
வடிவுள்ள அம்பையைத்தோய் (மீ)

வீஷ்மாசாரி தரு.

தேசத்தனவரும்மெச்சியே உன்மனம்வாடவே
கேளிக்கும்படிவந்தனனுன் வதைத்தோடவே
காசித்தனவரும் மெச்சிடும்படிநாடவே

(சுருள்) காட்டியவீரம்படைகளும் பொடிபடபோடவே
கருசமலர்வதனு வஞ்சிக்காகவந்து
மிருசியெல்நுமுன்னே பஞ்சாப்பறக்கடிப்பேன்
வெலலவந்தாய் நலம்சொல்லவந்தாய்
வல்லவனேயுன்னே வெல்லுவனே
வாசமானபல ராசருமெச்சிட
நேசமேதுநீ நன்மைகள்வைத்திட (தே)

பரசுராமர் தரு.

மெத்தமெத்தவே வீரியம்பேசுவதேதடா
வீரியமில்லாஉன்னுடன் யென்னவாதடா
பத்திசெய்குவாய் என்னைநீஜெயிப்பதுசூதடா

(சுருள்) பாரடாயென்னே எதுத்துவந்தது நீதடா
பையலுந்தனுக்கென்று அய்யபேதடாவாடா
வையகம்புகழ்வந்த பொய்யாவீரியன்றுனே
வாங்கிவிட்டேன்கணை தேங்கிவிட்டேன்
உயர்நீங்கிடவே மனந்தேங்கிடவே
உன்னிடபடைகளும் மடிபடயீடோ
எனக்குநீயும் கடிகியேபொடிபட (வா)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

சரியானநீதிநெறி யுள்ளவருக்கு
தகுமானகாரியமே வீரமாகும்
அரிதானஎன்னுடைய தாயைக்கொன்றதுபோல்
குருவென்றுயெண்ணு வனேவரிசிலேயைவாங்கி
சாம்பூட்டிநின்று வையகமுமதத்தளிக்கு அமரர்வாட
வீரியவான்படைகளெல்லாம் பிதிர்பட்டோட

ஷை தரு.

மீட்டினேனே அமோகபாணப்பூட்டினேனே
மீட்டியேபடையெல்லாம் வாட்டியெனதுவீரம்
காட்டிமுதிகிட்டோட ஓட்டுவேன்பாரிதோ (மீ)

பரசுராமர் கந்தார்த்தம்.

வடிவானகாங்கையனே வீரமேது
மருவாளியேந்திசின மிகுத்தபோது

கடலுலகுமன்னவரும் அயன்மாலீசன்
கண்டுமணம்விண்டிடுவார் யமரரெல்லாம்
படைகளெல்லாம்பொடிபடவே குருதியோட
பதைபதைக்க உன்மனதுசிதரிவாட
கடைவிழிகள்பொரிபரக்க வந்தெதிர்த்தேன்

ஷை தரு

கண்டிப்பேனேயுந்தனை யிப்போது தண்டிப்பேனே
அண்டாதகோபமும் கொண்டெதிர்த்தாலுன்னை
சண்டனுக்கிரையாகத் தண்டிப்பேன்பாரடா (க)

வீஷ்மாசாரி கந்தார்த்தம்.

தண்டிக்கஉந்தனுக்கு வீரமுண்டோ
சமர்களத்தில்குருபத்தி பாற்பதேது
கண்டிக்கஅரிதான சரங்களேவி
கடைவிழிகள்பொரிபரக்க சினத்துமீரி
மண்டலத்துமன்னரெல்லாம் மதிமயங்க
வலவனுந்தன்தேர்பரியும் பொடிகளாக
அண்டத்துவானவரும் மதிசயிக்க

ஷை தரு

ஆட்டுவேன் பம்பரம்போல்
வாட்டிடுவேனே நீட்டிசிலையிலம்பை
பூட்டியமோகமாக மீட்டிமீட்டிதலை
காட்டாம லோட்டுவேன் (ஆ)

பாசுராமர் கந்தார்த்தம்.

ஓட்டிவிடயுன்னலே யாமோபோடா
உலகெல்லாங்கீத்திபெரு மன்னநானே
நாட்டிலுள்ளமன்னவரும் தேவர்வாழ்க
நானுமிதோசிலைபூட்டி உக்கிரவீறங்
காட்டியேயுன்படைகள் கதறியோட
கறிபரியும் ரதசாறதியுமாள
வாட்டமில்லாஉன்மனது திடுக்கிட்டோங்க

ஷை தரு.

மாத்துவேனேசிலையில்பாணம் யேற்றுவேனே
மாத்திகணையைபூட்டி தூத்தியுன்படைகளை
பார்த்தவர்திடுக்கிட தோத்தோடும்படியாக (மா)

வீஷ்மாசர்ரி தரு.

வல்லுலக்கைகையிலெடுத்தேன் தாண்டிகுதித்து
வந்துயெகரி யடித்தே

தொல்லுலகம்வாடிடவும் வல்லவர்கண்டோடிடவும்
சல்லரிகள்பாடிடவும் கொல்லநமன்தேடிடவும்
சாடப்படைமுரிந்து ஓடப்பிழைக்கவழி
தேடநீயுமுதுகிட்டோட உக்கிறமுடனே (வ)

பரசுராமர் தரு

வீரதண்டமுமெடுத்தேன் நிலைகலங்க
மீரிசுயட்டி யடித்தேன்
பாரும்நடிங்கிடவே வீரமொடிங்கிடவே
தீரம்மடங்கிடவே பேருமழிந்திடவே
தேவரெல்லாம்ஜெயம்கூறவே இரத்தவெள்ளமுமயீரவே
மனதுகோபமாரவே சிரைமிகுத்து (வீ)

வீஷ்மாசாரி தரு.

அக்கினியாஸ்திரமெடுத்தேன் சிலையைப்பூட்டி
மிக்கஉந்தன்மீதில் விடுத்தேன்
பக்கனயெரிந்திடவும் திக்குகள்நிரைந்திடவும்
உக்கிறம்பிறந்திடவும் அக்கினிமறைந்திடவும்
ஓங்கக்கணக்கிக்கணைவாங்க படைகளெல்லாம்
தேங்கதேவாதிகளும். யேங்கிதவித்திடவே (அ)

பரசுராமர் தரு.

மாருக்கணைகள் ளெடுத்தேன்
கணைக்குகணைப்பாய யுந்தன்மீதில்விடுத்தேன்
வாடாமார்பிலும்போடா உனதுதோளிலும்
ஓடாகுடங்கள்தேரிலும் வோடார்தப்படைமீதிலும்
வாட்டவும்எனதுவீரம் காட்டவும்சிலையிலம்பை
நாட்டவும்அமோகமாக மீட்டவும்படைசிதர (மி)

வீஷ்மாசாரி கவி.

இருவருமேசமர்புரிந்து சமானமாக
யிரந்துஓர்தினமே யுத்தம்செய்ய
பெருமைபெரும் தேவர்களும்அதிசயிக்க
பிரசண்டதனுவாங்கி வீஷ்மாசாரி
அரிதானசரமாரி பெய்யும்போது
ஆனைபரிசேனைரதம் மடியதப்பி
புரம்கொடுத்துபயந்தோட பரசுராமர்புகழ்பெருகும்
அம்பையுமே யிரைக்கின்றாரே.

வசனம்.

இப்படியாக பரசுராமர் வீஷ்மாசாரியும்ஒருவற்கொருவர்எதிர்த்து பதினேறுதினம் யுத்தம்செய்ய வீஷ்மாசாரிகடிந்து அனேகமாகிய சரங்களையெய்ய இந்தறதகெஜதுரக பதாதிகளெல்லாம் முரிந்து [illegible]யுதங்கள்யெல்லாம் அழிந்துமுன்நிற்கமாட்டாமல் புரம்கொடுத்து [illegible]மர் உயர்தப்பிசோர அம்பைவீஷ்மரைபார்த்துசொல்லுவது.

அம்பை கவி.

வல்லமையிருப்பதென்றும் வானவர்நயமுரைக்க
சொல்வலியாலேவெல்ல சூரன்நீயாகையாலே
மெல்லியை அலையவிட்ட வீஷ்மரே உன்னைநானே
கொல்லாமல்போனால் மன்னர்குலமல்ல அரிகுவீரே.

கேளும் வீஷ்மரே என்னிடத்தில் யார்வந் தெதிர்த்த போதிலும் வெல்லும் வல்லமையிருக்குதென்று தேவர்முதலானவர் வந்து எனக்காக ஒருநியாயம் சொல்லவந்தால் அவாள்வரப்பிரசாதமிருக்குதென்றல்லவா யோசித்து என்னையிப்படி யலையசெய்தஉன்னைநான்கொல்லவகை தேடாமல் போனால்நான் இந்தராசகுலத்தில் பிரந்தவளல்ல நான் இழிகுலத்தில் பிரந்தவளல்ல நான் இழிகுலத்தில் பிரந்தவளென்னப்படும் நல்லது இருக்கட்டும்ராசனே.

பொது கவி.

ஆதிபெறசபதமிட்டுத் தோகையும்மனதுவாடி
விதிவசமிதுவோயின்னம் வீணாசைப்படவொண்ணாது
மதியதுமயக்கமாகி மலர்முகம்தவித்துவாடி
அதிவிதபதியைவிட்டு அம்பையும்வருகின்றாளே.

அம்பை தரு

அய்யோயினியென்ன செய்வேன்-யினிவேரேசிவனே
ஆதரவில்லாத பாதகியானேன்பிர்மதேவா
பொய்யர்மொழியாலே செய்யாகாரியஞ்செய்தேன்-சிவனே
நான்புருஷரைவைதுமே குரைசெய்துபிரந்தேனே-சிவனே
மைந்தரைபெற்றுனன் சிந்தைகளிக்காமல்சிவனே
மாதர்நகைத்திட பேதுகுரைசெய்தேன்-பிரமதேவா
அந்தனருக்குஎன்ன அருமபிழைமிசெய்தேனே-சிவனே
ஆளன்கீழ்ப்பெண்டீரைகோள்சொல்லி கலைத்தேனோ-பிர்மதேவா
வாழும்பெண்களுக்கென்ன தாழ்வுகள்செய்தோனே-சிவனே
மருந்திடமாதரை விருந்திட்டுபகைத்தனோ-பிரமதேவா
பாழும்சாலுவனாலே யேழைமதிப்போனே-சிவனே
பண்ணினதவக்குரை யின்னதென்றறிகிலேன்-பிரமதேவா
மதனும்றதியும்போலேவாழும் மன்னரைக்கண்டு-சிவனே
நான்வாடித்வித்திட வேடிக்கையோயிது-சிவனே
பதருதேஎன்நெஞ்சம் நதிமதிசடையணி-சிவனே

அம்பை-கவி

அய்யய்யோகாக்கையர்மேல் ஆசைக்கொண்டு
அலைந்தலைந்து என்மனதுவெருத்தேனிப்போ
கைசேறவிட்டதொரு பாவியாரை
பொய்யுரையாகாளிதன் சந்நிதிகண்டேன்